# நிலா

இருமாத இதழ்
இலவச வெளியீடு
5000 பிரதிகள்

புரட்டாதி - ஐப்பசி 2016 நிலா | சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு | இல. 41


## பொருளாதார அமைச்சர் மக்றோனின் வெளியேற்றமும்

## பிரான்சுவா ஹொலந் எதிர்கொள்ளும் புதிய சவால்களும்!!

**அதிபர் பிரான்சுவா ஹொலந்திற்கு** திரும்பிய பக்கம் எல்லாம் முட்டுக்கட்டைதான். ஆட்சிக் காலம் முழுவதையும் நிம்மதியாகக் கழித்துவிடமுடியவில்லை. அதிபரின் செல்வாக்கு பிரான்ஸ் மக்கள் மத்தியில் தொடர்ந்து சரிந்துகொண்டே வந்துள்ளது.

- அதிபரின் நம்பிக்கைக்குப் பாத்திரமான இடதுசாரிய அமைச்சர்களின் பதவி விலகல்கள்.
- 2017 அதிபர் தேர்தலில் வேட்பாளராவதற்கு தனது கட்சியின் உட்கட்சித் தேர்தலில் பங்குபற்ற வேண்டிய நிலை.
- பிரான்சின் தற்போதைய சமூக, பொருளாதார, பாதுகாப்பு நிலவரங்கள்.
- உட்கட்சிப் பிளவுகள்.

இவ்வாறாக ஒரு சில மாதங்களில் முடியவிருக்கும் தனது பதவிக் கால இறுதிக்குள் தீர்வுகள் முன்வைக்கவேண்டிய கட்டாயம் என சிக்கல்களின் பட்டியல் மிக நீளமாகிக்கொண்டே செல்கிறது.

இவற்றிற்கு மத்தியில் இன்னுமொரு ஏவுகணையாக பிரான்சுவா ஹொலந்திற்கு முன்னால் வந்து விழுந்திருக்கிறது பொருளாதாரத்துறை அமைச்சர் Emmanuel Macronஇன் வெளியேற்றம். 2017 பிரான்ஸ் அதிபர் தேர்தல் நெருக்கடி நகர்வில் இது மிகப்பெரிய முட்டுக்கட்டையாகியுள்ளது.



அதிபரின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர், இடது சாரியக் கட்சியின் இளமையான, துடிப்பான, செயற்பாட்டாளர், எதிர்வரும் தேர்தலிலும் அதிபரின் மீள் வெற்றிக்கு உறுதுணையாகச் செயற்படக்கூடியவர் என எதிர்பார்க்கப்பட்டது. Emmanuel Macronஇன் வெளியேற்றம் சோசலிசக் கட்சியையும், அதிபர் பிரான்சுவா ஹொலந்தையும் பாரிய நெருக்கடிக்குள் தள்ளிவிட்டுள்ளது. Emmanuel Macronஇன் இலட்சியங்களும் விருப்புகளும் வேறு விதமாக வடிவமைக்கப்பட்டுள்ளன. இதிலிருந்து மீள்வதற்கு கட்சி கடுமையாகப் போராட வேண்டியுள்ளது.



Emmanuel Macronஇன் பதவி விலகல்வரை அதிபரின் 2017 தேர்தல் போட்டியாளர்களைப் பட்டியலிட்டால், உட்கட்சி வேட்பாளர்கள் உட்பட போட்டிகள் மிகக் குறைவானதே. ஆனால் தற்போதைய நிலவரம் அவ்வாறு இல்லை. இந்நிலை தொடருமாயின் பிரான்சுவா ஹொலந் அதிபர் தேர்தலிலிருந்து பின்வாங்கவும் சாத்தியங்கள் உண்டென அரசியல் ஆய்வாளர்கள் கணிக்கின்றனர்.

Emmanuel Macronன் பதவி விலகல் ஒரு வகையில் எதிர்பார்க்கப்பட்டது தான். ஏப்ரல் மாதம் அமைச்சரின் புதிய அரசியல் இயக்கமாக En Marche! கட்சி தோற்றம் பெற்றது முதல் அமைச்சரின் இலக்குகள்பற்றி ஆரூடங்கள் கூறப்பட்டன.


நிலா
www.nilafrance.com

தொடர்புகளுக்கு : சங்கீதா அச்சகம்
Tél: 01 44 72 08 94
sangeethafrance@gmail.com



## Emmanuel Macron இன் வழிகாட்டி!

*அவர் வேறு யாருமல்ல. Emmanuel Macronஇன் துணைவியான Brigitte Trogneux தான். Trogneux குடும்பம் பிரான்சில் பிரபலமான குடும்பங்களில் ஒன்றாகும். Amiens நகரின் பிரபல சொக்லேட் தயாரிப்பாளர்கள். Emmanuel Macronஇன் உயர் நிலைக் கல்விக் கூடத்தில் Brigitte Trogneux மொழிப் பேராசிரியராகவும் நாடகத்துறைப் பயிற்சியாளராகவும் இருந்தார். பேராசிரியர் மீதான காதல் வயது வித்தியாசமின்றி 2007ம் ஆண்டு திருமண பந்தத்தில் முடிந்தது. நீண்ட காலமாக இவர்களது உறவு இரகசியமாகவே பேணப்பட்டது.*

*இன்று 58 வயதாகும் Brigitte Trogneux தான் இன்னமும் Emmanuel Macronஇன் அரசியல் பேராசிரியராகவும் வழிகாட்டியாகவும் திகழ்கிறார். Emmanuel Macron கலந்துகொள்ளும் எந்தவொரு அரசியல் அரங்குகளிலும் முன்வரிசையில் Brigitte Trogneuxஇன் இருப்பை அவதானிக்க முடியும். குறிப்புகள் எடுப்பதையும் Macronஇற்கு திருத்தங்களைச் சுட்டிக்காட்டுவதையும் காணமுடியும். ஒரு நிதித் துறை ஆய்வாளராக ஆரம்பித்தவரை ஒவ்வொரு படியாக முன்னகர்த்தி இன்று Emmanuel Macronஇன் 38வது வயதில் பிரான்ஸ் அதிபர் கனவைச் சுமக்கும் ஆளுமையாக நெறிப்படுத்தியுள்ளார்.*

*ஊடகங்களில் துணைவியார் தொடர்பாக முன்வைக்கப்படும் விமர்சனங்களுக்கு, ஆம்! எனது துணைவியின் வழிகாட்டலே எனது பலம் என Emmanuel Macron முற்றுப்புள்ளி வைத்துள்ளார்.*

இருப்பினும் அதிபரின் நம்பிக்கை மிகுந்த ஆளுமையாக, பிரான்சுவா ஹொலந்தின் கீழ் பதவிவகிக்கும் ஒரு அமைச்சராக, அதிபரை எதிர்த்துப் போட்டியில் இறங்கமாட்டார் என்றே எதிர்பார்க்கப்பட்டது.

En Marche! ஒரு அரசியல் இயக்கமே தவிர 2017 தேர்தல் நோக்கிய புதிய கட்சியல்ல என ஆரம்பத்தில் கூறப்பட்டது. இன்று Emmanuel Macron இன் பதவி விலகல் மேலும் சந்தேகங்களுக்கு வலுச்சேர்த்துள்ளன.

ஒரு அமைச்சராக அரசுடன் இணைந்து மக்களுக்கான தனது கடமையை சரிவரச் செய்தாலே போதுமானது. தனி மனித விளம்பரங்கள் மற்றும் சொந்தக் கட்சி வளர்ச்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்த்துக்கொள்வது நல்லது என அதிபர் பிரான்சுவா ஹொலந் அறிவுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த அறிவுறுத்தலைத் தொடர்ந்து அதிபருக்கும் பொருளாதாரத் துறை அமைச்சருக்குமான இடைவெளிகள் அதிகரிக்கவே செய்தன. எதிர் எதிர் விமர்சிப்புக்கள் என இருவரும் இரு பெரும் துருவங்களாகிப் போயினர். இத் தவிர்க்கமுடியாத அழுத்தமான நிலையிலிருந்து விடுதலை பெறவே அமைச்சரின் பதவி விலகல் என அவதானிக்கப்படுகின்றது.

Emmanuel Macron தனது பதவி விலகலின் போது "எனது அரசியல் நகர்வை இன்னுமொரு தளத்துக்கு எடுத்துச் செல்ல வேண்டிய கட்டாயம் எனக்குள்ளது. En Marche! அரசியல் இயக்கம் எதிர்வரும் தேர்தல் நோக்கிய சரியான பயணத்தை ஆரம்பிப்பதற்கு எனது அமைச்சர் பதவி தடையாகவுள்ளது. எனது அமைச்சர் பதவியை எனது எதிர்பார்ப்புகளுக்கு அமைய சரியான வழியில் செயற்படுத்த முடியவில்லை. அதற்காக நான் மிகவும் வருந்துகின்றேன் எனவும் தெரிவித்திருந்தார்.

மேலும், பிரான்சின் மிகவும் இக்கட்டான இக் கால கட்டத்தில் அதிபர் பிரான்சுவா ஹொலந்தின் சிறப்பான பிரதிநிதித்துவத்தையும், ஆட்சியையும் நான் மதிக்கிறேன். ஆனாலும் அதிபருடன் தொடர்ந்து பயணிக்க முடியாமைக்கு மனம் வருந்துகின்றேன் எனவும் தெரிவித்துள்ளார்.

●

**சங்கீதா அச்சகம்**

**39, Bd. de la Chapelle**
**75010 Paris**
M°: La Chapelle

sangeethafrance@gmail.com
**Tél. / Fax :**
**01.44.72.08.94**



# கடற்கரைகளில் Burkini அணியத் தடை!

**பிரான்சில்** எந்தவொரு சலனமும் இல்லாமல் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் இஸ்லாமிய மக்கள் மீதான வெறுப்பிற்கு மேலும் வலுச்சேர்க்கும் வகையில் கடற்கரைகளில் Burkini அணிவதற்கான தடை உத்தரவை அமுல்படுத்தி சில மாநகர சபைகள் நடவடிக்கைகள் எடுத்துவருகின்றன.

பிரான்சின் தென் நகரான மார்சேயில் வலது முன்னணி மாநகர சபை உறுப்பினர்களால் முன்னெடுக்கப்பட்ட Burkini மீதான தடை ஊடகங்களால் பெரிதும் பரபரப்பாக்கப்பட்டு பிரான்சின் முதன்மை விவாதமாக மாற்றம்பெற்றது.

நீஸ் நகரக் குண்டுவெடிப்பைத் தொடர்ந்து இத் தடை உத்தரவு கான் மற்றும் நீஸ் பகுதிக் கடற்கரைகளையும் தொற்றிக்கொண்டது. பல கடற்கரைகளில் மாநகரக் காவல் துறையினரால் தடை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட போது சர்ச்சைகள் பெரிதாகி வன்முறைகளாக மாற்றம் பெற்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஊடகங்களின் விவாதங்களைத் தொடர்ந்து அரசியல் தரப்பிலும் ஆதரவு, ஆதரவின்மை நிலைப்பாடுகள் பொதுப் பரப்பில் சூடுபிடித்தன. இத் தடையுத்தரவை முன்னெடுத்த மாநகர சபைத் தலைவர்களுக்கு தனது முழுமையான ஆதரவை வழங்குவதாக பிரதமர் மனுவல் வால்ஸ் தெரிவித்திருந்தார்.

மேலும் அவர் மரியான் *(Marianne)* உருவத்தை முன்னிலைப்படுத்தி "பிரான்சின் அடையாளம் *Marianne*. இவர் சுதந்திரத்தின் பிரதிபலிப்பு. பெண்கள் மீது கட்டவிழ்த்துவிடப்படும் கட்டுப்பாடுகள் அனைத்தையும் உடைத்தெறியும் திராணி உள்ள பிரதிநிதித்துவம் எனவும் குறிப்பிட்டுள்ளார். போர்க்குணம் மிக்க மரியான் உருவமே பிரான்ஸ் மக்களுக்கு முன்னுதாரணமாக இருக்கவேண்டும். அவள் தலை மறைத்து, முகம் மறைத்து, முக்காடு எதுவும் அணியவில்லை. ஏனென்றால் அவள் சுதந்திரமானவள் எனத் தெரிவித்து தனது Burkini தடையுத்தரவு ஆதரவு நிலையை வலியுறுத்தியிருந்தார்.

பிரதமரின் இக் கருத்து அரசியல் மற்றும் சமூகப் பரப்பில் வன்மையான எதிர்வினைகளைப் பெற்றுள்ளது.



மரியான் உருவம் பெண்களைப் பிரதிநிதித்துவப்படுத்தவில்லை. அது பிரான்ஸ் குடியரசிற்கான உருவமே என பெண்ணிய ஆர்வலர்களும் வரலாற்று ஆய்வாளர்களும் ஒருமித்த குரலில் தெரிவித்துள்ளனர்.

பிரதமரின் கருத்தை எதிர்த்து பிரான்ஸ் கல்வி அமைச்சர் Najat Vallaud-Belkacemஆல் முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் பிரான்சின் பெரும்பான்மை மக்களினதும் அரசியல் தலைவர்களினதும் ஆதரவைப் பெற்றிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தகைய ஆடைமுறைகளைத் தானும் எதிர்ப்பதாகத் தெரிவித்த கல்வி அமைச்சர் உடைத் தெரிவு முறைகள் மீதான தடை உத்தரவுகளையும் அது ஒரு சாரார் மீது ஏற்படுத்தும் தாக்கங்களையும் தான் வன்மையாகக் கண்டிப்பதாகத் தெரிவித்துள்ளார். இத் தடையுத்தரவுகள் ஒரு தனி மனிதத் தெரிவு மற்றும் சுதந்திரத்தில் கேள்விகளை எழுப்புவதால் தன்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை எனவும் இத்தகைய முன்னுதாரணங்களும் தடைகளும் பல இனங்கள் இணைந்து வாழும் பிரான்ஸ் நாட்டில் பாரதூரமான பிளவுகளை ஏற்படுத்தும் எனவும் தெரிவித்துள்ளார். அத்துடன் ஒரு இஸ்லாமியப் பெண் கடற்கரையில் அணியும் உடைக்கும் பயங்கரவாதத்திற்கும் Daech அமைப்புக்கும் எவ்வாறான தொடர்புகள் இருக்கக்கூடும் எனக் கேள்வியும் எழுப்பியுள்ளார்.

இன்றைய திகதிக்கு பிரான்ஸ் பாராளுமன்றம் இச் சட்டமூலத்தைத் தள்ளுபடி செய்து மாநகர சபைகளுக்கு கண்டனம் தெரிவித்துள்ளது. இருப்பினும் பல பகுதிகளில் தடையுத்தரவு அமுலில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. குறிப்பாக Corseஇல் Sisco நகர நீதிமன்றம் தடையுத்தரவை ஆதரித்துத் தீர்ப்பு வழங்கியுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

Burkini மீதான தடையுத்தரவு, பிரான்ஸ் வாழ் இஸ்லாமியர்கள் மீதான அத்துமீறல் என ஐ.நா சபை தனது கருத்தையும் பதிவுசெய்துள்ளது.

**ஒருவர் இன்னொருவருக்கு கற்பிக்கும்போது இருவர் கற்றுக்கொள்கின்றனர்.**



இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு

## பிரான்சின் சிறந்த வைத்தியசாலை!

பிரான்சின் சிறந்த வைத்தியசாலை என்ற பட்டத்தை போர்தோ போதனா வைத்தியசாலை மூன்றாவது முறையாகத் தக்கவைத்துள்ளது. பிரான்சின் 1400 வைத்தியசாலைகளுக்கிடையில் மேற்கொள்ளப்பட்ட இந்த பட்டியலிடலில் CHU Lille இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டுள்ளது.

நிபுணத்துவர்களால் மேற்கொள்ளப்படும் பிரத்தியேக வைத்தியங்கள், சத்திர சிகிச்சைகள் மற்றும் நாளாந்த சேவைகளின் தரம் ஆகியவை அடிப்படைக் காரணிகளாகக் கருத்தில் எடுக்கப்பட்டு பட்டியல்படுத்தப்படுகின்றது. Le Point செய்தித்தாளினால் இந்த ஆய்வுப் பட்டியல் வெளியிடப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.



## பாரிஸ் வீதியில் கார்கள் செல்லத்தடை!

பாரிசில் செயின் நதியின் வலது பக்க வீதியில் கார்கள் செல்வதைத் தடை செய்வதற்கான திட்டம் வரையப்பட்டுள்ளது. பாரிசில் கார்கள் அற்ற நதியின் வலது கரைக்கான இந்தத் திட்டத்தை ஆறு மாதங்கள் பரிசீலிக்க பொலிஸ் ஆதரவு தெரிவித்துள்ளது. ஆறு மாதகால பரீட்சார்த்த தடை வெற்றியளிக்குமானால் அது தொடர் அமுலாக்கத்திற்கு உட்படுத்தப்படும்.

3.3கி.மீ வரையான இந்த வீதியில் வாகனங்கள் செல்வதைத் தடைசெய்வதற்கான இந்தத் திட்டம் பாரிஸ் மாநகரசபையின் வாக்கெடுப்பிற்கு செப்ரெம்பர் இறுதிப்பகுதியில் விடப்படவுள்ளது. லியோன், போர்தோ ஆகிய மாநகரங்களில் இவ்வாறு நதிக் கரைகளில் வாகனம் செல்வதற்கான தடை நடைமுறையில் இருப்பதும் அது வெற்றியளித்திருப்பதைத் தொடர்ந்துமே பாரிஸ் மேஜரால் இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. ஒரு வருடத்தில் 6500பேரின் இறப்பிற்குக் காரணமாக உள்ள சூழல் மாசடைவைத் தடுப்பதற்கான இன்னொரு நடவடிக்கையாகவே இது நோக்கப்படுகின்றது.




## விடுமுறையைக் கழிக்க சிறந்த இடம்!

ஐரோப்பாவிலேயே வார இறுதி விடுமுறையைக் கழிக்க சிறந்தஇடமாக லியோன் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. World Travel Awards அமைப்பினால் இந்த சிறப்புப்பட்டம் வழங்கப்பட்டுள்ளது. Rhône, Saône ஆகிய பெரு நதிகள் சந்திக்கும் பிரான்சின் இரண்டாவது முக்கியமான நகரமாக லியோன் விளங்குகின்றது.




## சாரதி இல்லா சிற்றூர்திகள்

சாரதி இல்லா சிற்றூர்திகள் (மினி பஸ்கள்) உலகில் முதன்முறையாக பிரான்சின் லியோன் நகரில் தமது பயணத்தை ஆரம்பித்துள்ளன. ஒரு வருடத்திற்கும் மேலான முயற்சியின் பின்னர் லியோனில் பயணிகளை ஏற்றிச் சென்று வரலாற்றில் இது தனது முதல் பயணத்தைப் பதிவுசெய்துள்ளது.

லேசர் சென்சர், முப்பரிமாண பார்வைப் புலம், GPS என அதியுயர் தொழில் நுட்பத்துடன் இரண்டு சிற்றூர்திகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. மணிக்கு 20கிலோமீற்றர் பயணிக்கும் இவை 15 பயணிகளை ஏற்றவல்லவை. ஆரம்ப பரீட்சார்த்த ஓட்டமாக 5 தரிப்பிடங்களில் நிறுத்தி 10 நிமிடத்திற்கு தனது சேவையை மேற்கொண்டுள்ளது. 200,000யூரோக்கள் செலவில் பிரான்சின் Navya நிறுவனத்தால் இவை தயாரிக்கப்படுகின்றன. ஏனைய பிரான்ஸ் நிறுவனங்களினதும், பிற நாட்டு நிறுவனங்களினதும் இதையொத்த தயாரிப்புகள் பயணிகளை ஏற்றாது பிரான்சின் பிற நகரங்களில் பரிசோதிக்கப்பட்டது.

வாகன நெரிசலுக்குள் பயணிக்கும் தகைமையற்ற இந்த சிற்றூர்திகள் ஏனைய வாகனங்கள் அனுமதிக்கப்படாத பாதைகளிலேயே பயணிக்கும். பிரான்சில் சாரதிகள் இல்லாது இரு மெற்றோக்கள் சேவையில் உள்ளதும் இங்கே குறிப்பிடத்தக்கது.



இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு



# பிரான்சில் மேலும் மூன்று இடங்கள்


## சர்வதேச உல்லாசப் பயணிகள் வலயமாகின்றன.

சர்வதேச தரத்திலான வர்த்தகம், கலாச்சாரம், பாரம்பரியம், உல்லாசப் பயணிகளைக் கவரும் அம்சங்கள் ஆகியவற்றை அடிப்படையாக வைத்தே இந்தத் தெரிவு இடம்பெறுகின்றது.

Antibes, Dijon மற்றும் La Baule ஆகிய நகரங்களே இவ்வாறு சர்வதேச உல்லாசப் பயணிகள் வலயமாகின்றன. இவ்வலயங்களில் நள்ளிரவிலும் ஞாயிறு தினங்களிலும்கூட கடைகள் திறந்திருக்க முடியும். உள்ளூர் வர்த்தகத்தை அதிகரிக்க இந்த அங்கீகாரம் உதவும் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

மூன்று நகரங்களினதும் மாநகர சபைத் தலைவர்களின் வேண்டுதலுக்கு இணங்க இவ்வாறு பிரகடனப்படுத்தப்பட்டாலும் தற்போது அவற்றுக்கு பரீட்சார்த்த காலப்பகுதி வழங்கப்பட்டுள்ளது.

பிரான்சில் தற்போது இவற்றுடன் சேர்த்து 21 சர்வதேச உல்லாசப் பயணிகள் வலயங்கள் காணப்படுகின்றன. பாரிசில் மட்டும் 12 வலயங்கள் உள்ளன.



# மருத்துவர்களுக்கான கட்டணம் உயர்கிறது!

பிரான்சின் மருத்துவக் கூட்டமைப்பு (FMF) புதிய ஒப்பந்தத்தில் கைச்சாத்திட இணங்கியுள்ளது. பல சரத்துக்களை உள்ளடக்கிய இந்த ஒப்பந்தத்தில் முக்கியமாக வைத்தியர்களுக்கான அடிப்படை ஆலோசனைக் கட்டணம் 23 யூரோவிலிருந்து 25 யூரோவாக உயர்த்தப்படுகின்றது. FMFஇல் உள்ள 52.95வீதமான அங்கத்தவர்கள் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட ஆதரவளித்து வாக்களித்துள்ளதைத் தொடர்ந்து தாங்கள் கைச்சாத்திடத் தீர்மானித்துள்ளதாக தெரிவித்துள்ளனர். 5 அம்சங்களைக் கொண்ட இந்தக் கூட்டமைப்பில் MG France (பொது மருத்துவர் சங்கம்) Bloc (சத்திர சிகிச்சைப் பிரிவினர்) ஆகிய இரு மருத்துவ சங்கங்கள் July 27இல் கையெழுத்திட்டுள்ளன. ஆனால் இந்தப் பிரேரணையை அமுலாக்க மூன்றாவது சங்கம் ஒன்றின் கையெழுத்தும் அவசியமாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

மருத்துவர்களுக்கான பொது ஆலோசனைக் கட்டண உயர்வு 2017 மே 1ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரவுள்ளது. பொதுவான ஆலோசனைக் கட்டணம் இரண்டு யூரோக்களால் அதிகரித்தாலும் பிரத்தியேகக் கட்டணங்களும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. நோயின் தாக்கத்திற்கு ஏற்ப மருத்துவர் செய்யும் பிரத்தியேக சோதனைகளையும் பொறுத்து 25€, 30€, 46€, 60€ எனக்கட்டணங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. அது மட்டுமல்லாது மருத்துவ வசதிகள் அற்ற பகுதிகளில் மருத்துவ வசதிகளை ஏற்படுத்தும் வகையில் 50,000யூரோக்கள் உதவித் தொகையும் ஒதுக்கப்பட்டுள்ளது.



# பாரிசின் பழைய வீடு

**வரலாற்று** சிறப்புமிக்க பாரிஸ் நகரில் மிகவும் பழமை வாய்ந்த வீடு எது என்று தொடரும் சர்ச்சைக்கு நிபுணர்குழு விடைதேடியுள்ளது. எந்த ஆச்சரியத்திற்கும் இடமின்றி இந்த பரிசு பாரிசின் 3ஆம் வட்டாரத்தில் 51 rue de Montmorency எனும் இடத்தில் உள்ள வீட்டிற்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்தக் கல்வீடு 600 ஆண்டுகளுக்கு முற்பட்டது. யுனெஸ்கோவால் 2011இல் இருந்து ஒரு வரலாற்றுச் சின்னமாகவும் இந்தக் கட்டடம் பட்டியலிடப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. உலகின் மிகவும் புகழ்மிக்க Alchemists (உலோகங்களை தங்கமாக மாற்றியமைக்கும் கலை) மற்றும் எழுத்தாளராக விளங்கிய Nicolas Flamelன் முதல் வீடு இதுவாகும். இவர் பெயர் Harry potter, Da vinici code ஆகிய உலகப் பிரபல புத்தகங்களில் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. பாரிசில் இவர் பெயரில் வீதியொன்றும் காணப்படுகின்றது.

ஆனால் முதலாம் உலகப் போரின் ஆரம்பத்தில் பாரிசில் Le Figaro என்ற வீட்டையே மிகப் பழைய வீடாக நிபுணர்கள் அடையாளமிட்டிருந்தார்கள். 13ஆம் நூற்றாண்டுக்கு உரியதாக அவர்கள் கணக்கிட்டிருந்தாலும் தற்போதைய ஆய்வுகளின் படி அது 1644 – 1655 காலப்பகுதிக்குரியதாக கணக்கிடப்பட்டுள்ளது. தற்போது இவ் வீடு இரண்டாம் இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளது.



இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு




**தனிநபர்** நிலைமைகளுக்கேற்ப ஒவ்வொரு தடவையும் அரசாங்க உதவித் தொகையை(RSA) மாற்றுவதைவிடுத்து மூன்று மாதத்தில் கணிக்கப்படும் உதவித் தொகையை ஒரு வருடம் முழுவதும் வழங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. அதைவிட RSA கணிப்பிடும் முறையில் புதிய விதிகளை நடைமுறைப் படுத்தவுள்ளதாகவும் அரசாங்கம் தெரிவித்துள்ளது. அரசாங்க உதவித் தொகை வழங்கும் நடைமுறையில் பாரிய சீர்திருத்தம் மேற்கொள்ளப்படவேண்டும் என ஐந்து மாதங்களுக்கு முன்னர் பாராளுமன்ற உறுப்பினர் Christophe Sirugue விடுத்த கோரிக்கையை அடுத்தே இது நடைமுறையாகவுள்ளது.


விவாகரத்து, வேலை இழப்பு போன்று தொழில் நிலையில் ஏற்படும் மாற்றங்கள் விதிவிலக்காகக் கருதப்படுகின்றது. அரசாங்க உதவியைப் பெற்றுக்கொள்ளக் கூடிய நிலையில் உள்ள ஒருவர் ஆக ஒரு பத்திரத்தை நிரப்புவதன் ஊடாக அனைத்து விதமான அரச உதவிகளையும் பெற முடியும். அதைவிடவும் வயதுக்கு வந்த மாற்றுத்திறனாளிகளுக்கான சேவை 5 அல்லது 10 வருடங்களிலிருந்து 20 வருடமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதற்காக உதவி வழங்கும் திணைக்களங்களுக்கு மேலதிக நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது.

RSA பெற்றுக்கொள்ளும் ஒருவர் அல்லது வேறு அரச உதவிப் பணத்தைப் பெறும் ஒருவர் வேலைக்கு செல்ல ஆரம்பித்தால் ஒரு பத்திரத்தை நிரப்புவதன் ஊடாக Bénéficier de la prime d'activité பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


தமிழர் புனர்வாழ்வுக்கழகம் நடாத்தும்
9வது ராகசங்கமம்,
இசைத்திறன் போட்டி
23.10.2016 மதியம் 12 மணிக்கு
50 Place de Torcy -75018 Paris

திருமறைக்கலாமன்றத்தின்
'கலைக்கூடல்'
09.10.2016
'Embarcadere' 3, rue Firmini Gémier,
93300 Aubervilliers
Métro : Aubervilliers 4 chemins + Bus
: 170, 150 arrêt : André Karman


## "பிரான்ஸ் இஸ்லாமிய அமைப்பிற்கு பெண் தலைமைத்துவம் தேவை!"



'Fondation pour l'islam de France' பிரான்சில் பெயரளவிலேயே ஒரு அமைப்பாகவுள்ளது. எந்தவித செயற்பாடுகளோ, பிரான்ஸ் இஸ்லாமியர்கள் தொடர்பான அறிவுகளோ இல்லாத, எந்தவொரு ஆளுமைகளும் அற்ற அமைப்பாக செயற்பட்டு வருகின்றது. தற்போது பிரான்சில் இடம்பெற்ற தீவிரவாதத் தாக்குதல்களைத் தொடர்ந்து இவ் அமைப்பு இயங்க வேண்டியதன் முக்கியத்துவம் அரசால் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இஸ்லாமிய கலாச்சார மையங்கள், பள்ளிவாசல்கள் மற்றைய சிறிய அமைப்புகள் என அனைத்து அமைப்புகளும் பிரான்ஸ் இஸ்லாமிய அமைப்புத் தலைமையின் கீழேயே இயங்க வேண்டியது கட்டாயமாகும். அவர்களுக்கு கிடைக்கும் நிதிகள் முதல் கலாச்சார மையங்கள் பள்ளிவாசல்களின் செயற்பாடுகளைக் கண்காணிக்கவேண்டியதும் இவர்களது கடமையே. இத்தகைய காரணங்களாலேயே இஸ்லாமிய Fondation முக்கியத்துவம் அதிபர் பிரான்சுவா ஹொலந்தினால் வலியுறுத்தப்பட்டுள்ளது. அதன் தலைமைக்கு முன்னாள் உட்துறை அமைச்சர் Jean Pierre Chevènement அவர்களை அதிபர் பரிந்துரை செய்துள்ளார்.

2005ல் உருவான பிரான்ஸ் இஸ்லாமிய பவுண்டேசன் உட்கருத்து முரண்பாடுகளால் இயங்க முடியாமல் தவித்துவருகின்றது. இது தொடர்பாக கருத்து வெளியிட்ட பெண் உரிமைசார் அமைச்சர் Laurence Rossignol, இஸ்லாமிய மதக் கொள்கைகள் கோட்பாடுகள் சட்டதிட்டங்களை ஒரு இஸ்லாமியப் பெண் தலைமையில் எதிர்கொள்வதே சரியாக இருக்கும். ஒரு இஸ்லாமியப் பெண்ணின் வாழ்க்கை முறை, கலாச்சாரம் மற்றும் நாளாந்த நடைமுறைகள் இவற்றின் வழியாகவே கடக்க நேரிடுகின்றன. ஆகையினால் அவர்களால்தான் சரியான முறையில் எதிர்கொள்ள முடியும் எனவும் அடிப்படைவாதங்களில் இருந்து விடுபட்ட பிரான்ஸ் குடியரசின் மதிப்புகளைப் பேணக்கூடிய தலைமை அவசியம் எனவும் தெரிவித்துள்ளார். அத்துடன் ஆண், பெண் சமத்துவம் என்பது சகல மதங்களாலும் பின்பற்றப்பட வேண்டியது மிக அவசியம் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.









Tél (office) : 0033 148371675
www.trttamilolli.com

நிலா

# சங்கீதா அச்சகத்தின்




அன்புடையீர்,

## வணக்கம்

சங்கீதா அச்சகத்தினால் தயாரிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் தமிழர்களுக்கான ‘முகவரி’ கையேட்டில் உங்கள் முகவரிகளும் இடம் பெறுவதை நாம் விரும்புகிறோம். வரவேற்கிறோம்.

2006 மற்றும் 2008 ம் ஆண்டுகளில் எமது நிறுவனத்தால் ‘பிரான்ஸ் தமிழர் வழிகாட்டி’ என்ற நூல் வெளிவந்தது யாவரும் அறிந்ததே. அதேபோல் தற்போதைய தேவையை கருத்திற்கொண்டு மேலும் மெருகூட்டிய ‘கையேடு’ ஒன்றினை வர்த்தக நோக்கில் வெளிக்கொணர முயற்சிக்கின்றோம். வர்த்தக ஸ்தாபனங்களின் முகவரித் தொகுப்பாக வெளிவரும் இக்கையேட்டில்

- வர்த்தக ஸ்தாபனங்கள்
- பொது ஸ்தாபனங்கள்
- சங்கங்கள்
- தமிழ்ப் பாடசாலைகள்
- தூதரகங்கள்
- ஆலயங்கள்
- பாரிஸ் சுற்றுலாத்தலங்கள்
- தமிழர் விழா மண்டபங்கள்
- தமிழ் இணையத்தளங்கள்
- தமிழர் வெளியீடுகள்
- கலைஞர், எழுத்தாளர் தொலைபேசி இலக்கங்கள்

போன்ற விபரங்கள் உள்ளடக்கப்படவுள்ளன.

உங்கள் முகவரிகள் இலவசமாக பதியப்படும். நீங்கள் உங்கள் ஸ்தாபனங்களை பெரியளவில் விளம்பரமாக பதிவு செய்ய விரும்பின் பணம் செலுத்தவேண்டும். முகவரி கையேடு முழுமைபெற உங்கள் அனைவரது ஒத்துழைப்பினையும் நாடுகின்றோம்.

நன்றி

மேலதிக விபரங்களுக்கு:
சங்கீதா அச்சகம்
01 44 72 08 94
39, Bd La Chapelle
75010 Paris
M°: La Chapelle








இது ஒரு நிலா தயாரிப்பு

புதிய டிசைன்களில் அழைப்பிதழ்கள், Cadeaux Bags என்பன
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்!

# விளையாட்டு வீரர்களின் உச்சக்கனவு ஒலிம்பிக்!




வாழ்க்கையில் குழந்தைப் பருவம் முதல் பெரும் பகுதியை தமது வெற்றிப் பதக்கங்களுக்காக அர்ப்பணித்து நாட்டுக்கும் பெருமை சேர்ப்பது விளையாட்டு வீரர்களின் பெருமையாகும். குறிப்பிட்ட சில விளையாட்டுத் துறையினரைத் தவிர்த்து நாட்டுக்கு பெருமை சேர்க்கும் மற்றைய அனைத்து வீரர்களுக்கும் ஒரே சன்மானம் முலாம் பூசப்பட்ட பதக்கங்களும், கேடயங்களும், கிண்ணங்களும் மட்டும் தான்.

11402 போட்டியாளர்கள் பங்குபற்றிய Rio ஒலிம்பிக் போட்டிகளிலும் அத்தனை பேரின் கனவும் தமது நாட்டுக்காக தங்கம் வெல்வதே. ஒலிம்பிக் போட்டியில் வழங்கப்படும் பதக்கங்கள் அவர்களுக்கு பல மில்லியன் பெறுமதியுடையவை தான் என்றாலும் பொருளாதார ரீதியாகப் பார்த்தால் முலாம் பூசப்பட்ட தங்கப் பதக்கத்தின் விலை மிஞ்சிப்போனால் 500 யூரோக்களைத் தாண்டாது என்பது குறிப்பிடத்தக்கது. தமது நாட்டுக்காக வெற்றியீட்டி நாட்டுக்குப் பெருமை சேர்த்து வரும் வீரர்களுக்கு அவர்களின் நாட்டு அரசுகள் என்ன சன்மானம் கொடுக்கின்றன?

இந்த முறை ஒலிம்பிக் போட்டிகளில் அதிகளவு வீரர்களை களத்தில் இறக்கிய நாடு என்றால் அது அமெரிக்காவாகத்தான் இருக்கும், ஒரு விளையாட்டு மிச்சமில்லாமல் 552 வீரர்களை களத்தில் இறக்கியது. அவர்களைத் தொடர்ந்து போட்டி ஒருங்கிணைப்பு நாடான பிறேசில் 475, அவுஸ்திரேலியா 416, சீனா 413, ஜேர்மனி 420 என முன்வரிசையில் நிற்க பிரான்ஸ் 396வீரர்களுடன் களமிறங்கியுள்ளது. இந்தியா 120, சிங்கப்பூர் 22, இலங்கை 9 பேர் எனத் தொடரும் பட்டியலில் பல நாடுகள் தங்கள் நாட்டு ஒரு வீரருடனும் களமிறங்கின என்பதும் குறிப்பிடத்தக்கது.

தங்கப்பதக்க வெற்றியாளர்களுக்கு அரசுகள் அறிவித்துள்ள வெற்றிச் சன்மானங்கள் மேலுள்ள பட்டியலில் உள்ளவாறு அறிவிக்கப்பட்டுள்ளது. இங்கிலாந்து வீரர்களுக்கு கைகுலுக்கல்களும் பாராட்டுகளும் பதக்கம் வென்ற பெருமையும் மட்டும் தான். அவர்களுக்கு எந்தவித சன்மானமும் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. •




பாரிஸ் லாச்சப்பலில்

# கோபால் அன் கோ

# GOPAL & CO

வாடிக்கையாளர் வசதி கருதி ....

**லாச்சப்பலில்...**
72, Rue Louis Blanc,
75010 Paris.
M°: La Chapelle

**பொபினியில்...**
205, AV. JEAN JAURES,
93000 BOBIGNY.
Tram 1: La Ferme

இலங்கை இந்தியாவிற்கு
மிகக் குறைந்த விலையில்
கதைப்பதற்கு Kish Mobile!




Tél : 09 51 56 76 52 Fax : 01 46 07 13 03

# ‘உலகம் முழுவதும் 65 மில்லியன் அகதிகள், நாடுகளற்று அனாதரவாக அலைகிறார்கள்!’

– ஐ.நா அறிக்கை



அகதி அந்தஸ்து என்பது ஆண், பெண், குழந்தை என்றோ அல்லது சமூக பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் என்றோ எவருக்கும் விதிவிலக்கானது அல்ல. சொந்த மண்ணை விட்டு விலக நிர்ப்பந்திக்கப்படும் ஒவ்வொருவனும் அகதியே!

முதல் முறையாக இந்த வருடம் 31வது ஒலிம்பிக் போட்டிகளில் அகதிகளுக்கான ஒலிம்பிக் அணி Athlètes Olympiques Refugies களமிறங்கியுள்ளது. ஐ.நா சபையின் கோரிக்கையின் அடிப்படையில் சர்வதேச ஒலிம்பிக் சம்மேளனம் இவ் வரலாற்றுச் சாதனையை சாத்தியப்படுத்தியுள்ளது.

இன்றைய காலகட்டத்தின் உலகளாவிய முக்கிய நெருக்கடிகளில் ஒன்றான அகதி வாழ்க்கையின் இருப்பை முன்னிலைப்படுத்தவும் எவருக்கும் எவரும் உயர்ந்தவரோ தாழ்ந்தவரோ அல்ல என்ற கருத்தினை வலியுறுத்தவுமே விளையாட்டு வீரர்களை ஒன்று சேர்த்துள்ளோம் என ஒலிம்பிக் சம்மேளனத் தலைவர் Thomas Bach தெரிவித்துள்ளார்.



206 நாடுகளிலிருந்து 11402 விளையாட்டு வீரர்கள் Rio ஒலிம்பிக் போட்டியில் பங்கு பற்றுகின்றார்கள். இத்தனை ஆயிரம் போட்டியாளர்களுக்கு மத்தியில் 65 மில்லியன் அகதிகளைப் பிரதிபலிக்கும் அகதிகளுக்கான அணி ஆரம்ப விழாவின் போது வெறும் 10 வீரர்களுடன் ஒலிம்பிக் கொடியின் கீழ் அணிவகுத்து வந்தனர். அன்று அந்த நிமிடம் மற்றைய நாட்டு விளையாட்டு வீரர்களுடன் இணைந்து ஒலிம்பிக் விளையாட்டு அரங்கமே எழுந்து நின்று ஆர்ப்பரித்தது மறக்க முடியாத தருணம் என சிரியா அகதி வீராங்கனையான Yusra Mardini தெரிவித்துள்ளார்.

கென்யா, லக்சம்பேர்க், பிரேசில், பெல்ஜியம் மற்றும் ஜேர்மனியில் தஞ்சம் புகுந்து அகதியாக வாழும் தென் சூடான், எதியோப்பியா, கொங்கோ மற்றும் சிரியா ஆகிய நாட்டைச் சேர்ந்தவர்கள் தான் இந்த 10 வீரர்களுமாகும். அவர்களின் ஒலிம்பிக் கனவு நனவாகிவிட்ட நிலையில் பதக்கங்களும் வெல்வார்கள் என எதிர்பார்க்கப்பட்டது. பதக்கங்கள் பெற்றுக்கொள்ளாவிட்டாலும் வரலாறு படைத்துவிட்டார்கள்.

# கை கொடுக்கும் பழக்கம்

**கை கொடுக்கும்** பழக்கம் கிறிஸ்துவிற்கு முன் 5ம் நூற்றாண்டு முதல் புழக்கத்தில் உள்ளதாக வரலாறு கூறுகின்றது. வலக்கையை பற்றிக் குலுக்குவதே வழக்கத்தில் உள்ளது. உலக மக்கள் தொகையில் 90 சதவீதமானவர்கள் வலது கை பாவனையுடையவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஏன் இந்த வழக்கம் ஆரம்பமானது என்பதற்கு பல காரணங்கள் கூறப்படுகின்றன. இவ்வழக்கம் வணக்கம் சொல்வதற்காக உருவாகவில்லை என்பது ஆய்வாளர்களின் தீர்க்கமான கருத்தாகும். இரண்டு மனிதர்களுக்கு



இடையில் நம்பிக்கையை உருவாக்குவதே கரம் பற்றிப் பேசுதலின் முக்கிய நோக்கமாக இருந்துள்ளது. கைகளில் ஆயுதம் இல்லை நம்பிப் பேசலாம் என்பதும், வலக்கரம் பற்றும் போது உடனடியாக வாளை உருவ முடியாது என்பதும் முக்கிய காரணங்களாக ஆய்வாளர்களால் முன்வைக்கப்படுகின்றன. போர்க்களங்களில் மிகத்தொன்மையான காலத்தில் உருவாகி உருவம்பெற்ற கை கொடுக்கும் வழக்கம் மத்திய காலத்தில் தான் (Moyen age) வணக்கம் சொல்லும் முறையாக பொதுத்தளத்தில் கரம் பற்றி இன்றுவரை தொடர்கின்றது.

சமூகக் குறியீடுகளில் முதன்மையானதாகக் கருதப்படும் கைகொடுத்துப் பேசும் வழக்கம் வணக்கம் சொல்ல, வாழ்த்துச் சொல்ல, நன்றி சொல்ல, பாராட்ட, மரியாதை நிமித்தமாக எனப் பல்வேறு வகைப்பட்ட சமூக பரிமாற்றமாக எம்மோடு தங்கிவிட்டது.


இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு



# உயர் விருது பெறும் அதிபர் பிரான்சுவா ஹொலந்

பிரான்சில் வாராவாரம் வெளியாகும் கருத்துக் கணிப்புகள் பிரான்சுவா ஹொலந்திற்கு சாதகமாக அமைவதில்லை. 2017 அதிபர் தேர்தலில் முதல் சுற்றிலேயே தோற்கடிக்கப்படுவார் என்பதே கணிசமானோரின் கருத்தாகவுள்ளது. ஆனால், பிரான்சில் மட்டும் தான் இந்த நிலை. பிரான்ஸ் தவிர மற்றைய நாடுகளில் அதிபரின் ஆளுமை கவனமாகக் கண்காணிக்கப்படுகின்றது என்பது மீண்டும் நிரூபணமாகியுள்ளது.

நியூயோர்க்கைத் தலைமையாகக் கொண்டு இயங்கும் மத நல்லிணக்க அறக்கட்டளையான The Appeal of Conscience அமைப்பு 2016ம் ஆண்டிற்கான உலகின் தலைசிறந்த நாட்டுத் தலைவர் விருதிற்காக அதிபர் பிரான்சுவா ஹொலந்தைத் தெரிவுசெய்துள்ளது.

இவ் அமைப்பு 1965ம் ஆண்டு யூத மதத் தலைவர்களில் ஒருவரான Rabbi Arthur Schneierஇனால் உலகம் எங்கிலும் மதநல்லிணக்கம் மதத் தெரிவுச் சுதந்திரம் மற்றும் மனித நேயம் என்பவற்றை நிலைநாட்ட உருவாக்கப்பட்டதாகும்.

இவ் உயர் விருதானது, மத நல்லிணக்கம், சுதந்திரம், சமாதானம் பேணும் ஒன்றுபட்ட சமூகத்தைக் கட்டியெழுப்பவும் மனித நேயம் பகிரும் மனிதர்களை உருவாக்கவும் உழைப்பவராக, இதே காரணங்களுக்காக மற்றை நாட்டுத் தலைவர்களுடன் ஒன்றிணைந்து ஒரு சுதந்திர எதிர்காலச் சமூகத்தைக் கட்டியெழுப்பத் தொடர்ந்து பாடுபடுபவரா கவும் இருக்கும் நாட்டின் தலைவர் ஒருவருக்கே வழங்கப்படுகின்றது என The Appeal of Conscience அமைப்புத் தெரிவித்துள்ளது.

பிரான்சில் நடந்துமுடிந்த பயங்கரவாதத் தாக்குதல்களுக்குப் பின்னரான அதிபரின் தெளிவான முன்னகர்வுகளும், நிதானமான செயற்பாடுகளும், பயங்கரவாதத்தை அதிபர் எதிர்கொண்ட விதமும் இந்த விருதுக்காக அதிபர் பிரான்சுவா ஹொலந்தைத் தெரிவுசெய்ய எம்மைப் பணித்துள்ளது என அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

## உலகின் சிறந்த பல்கலைக்கழகங்கள் முன்னேறும் பிரான்ஸ் !



பிரான்சின் மூன்று பல்கலைக் கழகங்கள் உலகின் அதி சிறந்த பல்கலைக் கழக பட்டியலில் முதல் 100க்குள் இடம்பிடித்துள்ளன. வருடாந்தம் வெளியிடப்படும் Shanghai Ranking பட்டியல் அண்மையில் வெளியிடப்பட்டுள்ளது.

14 வருடங்களாகத் தொடர்ந்து முதலிடத்தில் இருந்துவரும் Harvard பல்கலைக் கழகம் இம்முறையும் தனது இடத்தைத் தக்க வைத்துள்ளது. கேம்பிறிட்ஜ், Oxford ஆகிய இரண்டு பிரித்தானிய பல்கலைக் கழகங்கள் முதல் 10 இடத்திற்குள் இடம்பிடித்துள்ளன. அமெரிக்க பல்கலைக் கழகங்கள் ஆக்கிரமித்துள்ள இந்தப் பட்டியலில் பிரான்சின் மூன்று பல்கலைக் கழகங்கள் முதல் 100க்குள் இடம்பிடித்துள்ளன. பிரான்சின் Pierre et Marie Curie பல்கலைக் கழகம் 39வது இடத்திலும், Paris Sud பல்கலைக் கழகம் 46வது இடத்திலும் École normale supérieure பல்கலைக் கழகம் 87வது இடத்திலும் உள்ளன.

மொத்தமாக பிரான்சின் 22 பாட சாலைகள் முதல் 500ற்குள் இடம்பிடித்துள்ளன. அமெரிக்கா, சீனா, ஜேர்மனி, ஐக்கியராச்சியம், அவுஸ்ரேலியாவைத் தொடர்ந்து பிரான்ஸ் ஆறாவது இடத்தில் உள்ளது.

உலகப் பல்கலைக் கழகங்களைக் கல்வி ரீதியில் தரப்படுத்தும் Shanghai Ranking 2003ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. தெரிவுசெய்யப்பட்ட 1200 பல்கலைக்கழகங்களில் முதல் 500 பல்கலைக்கழகங்கள் பட்டியலிடப்படுகின்றன.

இதற்காக ஆறு முக்கிய காரணிகள் கவனத்திலெடுக்கப்படுகின்றன. நோபல் பரிசு வென்ற முன்னாள் மாணவர்களின் எண்ணிக்கை, துறை சார்ந்து உயர் நிலையில் உள்ள ஆய்வாளர்கள், அதி சிறந்த சஞ்சிகைகளில் வெளியிடப்படும் கட்டுரைகளின் எண்ணிக்கை ஆகியனவும் இதில் செல்வாக்குச் செலுத்துகின்றன.




இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு

## உலகில்
# அதிக வருமானமீட்டும் நாவலாசிரியர்கள்

**21ம் நூற்றாண்டின்** கணினியுக எழுச்சியோடு புத்தக வாசிப்பும் முடிந்துவிடும் என்றே எதிர்பார்க்கப்பட்டது. ஆனாலும் வாசகர்களின் எண்ணிக்கை அதிகரித்துத்தான் வருகின்றதென்பது ஆச்சரியமான செய்தி. குறிப்பாக இளம் பருவத்தினர் மத்தியில் ஆரோக்கியமான வளர்ச்சி உருவாகிவருவது மிகவும் மகிழ்ச்சியான செய்தி என்கிறார் சிறுவர்களுக்கான புனைவு எழுத்தாளர் Jeff Kinney.

இன்றைய திகதிக்கு உலகளவில் புனைவு எழுத்தாளர்களில் அதிகளவு வருமானம் பெறுபவர்கள் யார் என்ற தகவலை அமெரிக்க இதழாசிரியர்கள் வெளியிட்டுள்ளனர். தமிழ் புனைவாளர்களிடம் அதிக வருமானம் ஈட்டும் எழுத்தாளர்கள் என்றாலே அவர்களிடம் கோபமும் விரக்தியும் மட்டுமே எஞ்சும்.

எழுத்தாளர் James Patterson (அமெரிக்கா) 69 வயது – கடந்த வருட வருமானமாக 95 மில்லியன் டொலர்களைப் பெற்றுள்ளார். தொடர்ந்து மூன்றாவது முறையாகவும் முதலாவது இடத்திலுள்ளார். திரில்லர் மற்றும் துப்பறிவு வகை புனைவுகளே இவரின் கைவண்ணமாகும். டிடெக்டிவ் Alex Cross கதாபாத்திரம் இவரின் உருவாக்கமே!









Alex Cross துப்பறியும் பல தொடர் நாவல்களைப் படைத்துள்ளார்.

சிறுவர்களுக்கான எழுத்தாளரான Jeff Kinney ன் கடந்த வருட வருமானம் 19,5 மில்லியன் டொலர்களாகும். James Patterson உடன் ஒப்பிடும் போது இவரின் வருட வருமானம் வெகு தொலைவி லேயே உள்ளது.
இங்கிலாந்தைச் சேர்ந்த பிரபல Harry Potter இதிகாச புனைவாளர் J.K Rowling இற்கான வருட வருமானம் 19 மில்லியன் டொலர்களாகும்.

இவர்களை தவிர்த்து திகில் (Horreur) வகை புனைவாளர் Stephen King 15 மில்லியன் டொலர்களுடன் ஐந்தாவது இடத்திலும், டார்வின்சி கோட் எழுத்தாளர் Dan Brown 9,5 மில்லியன் டொலர்களுடன் 12வது இடத்தையும் பிடித்துள்ளனர். முதல் மூன்று இடங்களை பிடித்துள்ள மூவரும் இளைஞர்களுக்கான எழுத்தாளர்கள் என்பதும் James Patterson தனது வருமானத்தில் பெரும்பகுதியை இளைஞர்களின் வாசிப்பை ஊக்கப்படுத்துவதற்கான திட்டங்களுக்காக செலவிடுகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

---




## பிரான்சிடமிருந்து புகையிரதங்களை பெற்றுக்கொள்ளும் அமெரிக்கா

அதிவேக புகையிரத சேவைக்கான புகையிரதங்களைப் பெற்றுக்கொள்ள பிரான்சை நாடியிருக்கின்றது அமெரிக்க நிறுவனம். வாஷிங்டன், நியூயோர்க் மற்றும் பொஸ்ரன் ஆகிய பெரு நகரங்களுக்கிடையேயான சேவைக்காக பிரான்சின் Alstom நிறுவனத்திற்கு 1.8 பில்லியன் யூரோக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அமெரிக்காவின் முக்கிய புகையிரத நிறுவனமான Amtrak எனும் நிறுவனத்தினாலேயே இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

Amtrak நிறுவனத்திடம் ஏற்கனவே உள்ள அதி வேக புகையிரதங்கள் மணிக்கு 241 கிலோமீற்றர் வேகத்தைக் கொண்டவை. மணிக்கு ஆகக் கூடியது 300 கிலோமீற்றர் வேகத்துடன் Alstom நிறுவனத்தால் இப் புதிய புகையிரதங்கள் தயாரிக்கப்படவுள்ளன. அதைவிட Amtrak நிறுவனத்திடம் ஏற்கனவே உள்ள Acela சேவையை விட 33வீதம் அதிக பயணிகள் புதிய புகையிரதத்தில் பயணிக்கமுடியும். TGV புகையிரதத்தைத் தயாரித்த பெருமைக்குரிய Alstom நிறுவனம் அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்கவுள்ள தமது நவீன தயாரிப்பான Avelia Libertyக்குரிய அனேகமாக புதிய பாகங்களை நியூயோர்க்கில் தயாரிக்க உடன்பட்டுள்ளன. அத்துடன் நீண்ட காலத்திற்கு இவற்றுக்கான தொழில்நுட்ப உதவியையும், உதிரிப்பாகங்களையும், மாற்றுப் பெட்டிகளையும், பராமரிப்பு உபகரணங்களையும் வழங்க Alstom நிறுவனம் ஒப்புக்கொண்டுள்ளது.

மக்கள் செறிவுகூடியதும், அதிகூடிய பயணிகள் புகையிரத சேவையைப் பயன்படுத்தும், அமெரிக்கப் பொருளாதாரத்தில் முக்கிய செல்வாக்குச் செலுத்தும் இந்தப் பிராந்தியங்களில் Avelia Liberty Line பயன்படுத்தப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது.



2017 பிரான்ஸ் அதிபர் தேர்தலில் வேட்பாளரா? இல்லையா? என்ற தகவலை இலையுதிர்கால ஆரம்பத்தில் அறிவிப்பேன். மேலும் வேட்பாளராக இல்லாத பட்சத்திலோ அல்லது தேர்தலில் தோல்வியடைய நேர்ந்தாலோ மீண்டும் அரசியலில் நுழைய மாட்டேன். முன்னாள் அதிபர்களான நிக்கோலா சார்க்கோசி மற்றும் Valéry Giscard d'Estaing (1974 – 1981) போன்று மீள் அரசியல் பிரவேசம் ஒரு போதும் சாத்தியமே இல்லை.

– பிரான்சுவா ஹொலந்
Rio பத்திரிகையாளர் சந்திப்பின்போது

**தீதும் நன்றும் பிறர்தர வாரா!**

# பாரிஸ் மகாஜனா கல்வி நிலையம்

## *Mahajana Master Institute- Paris.*



# அக்டோபர் முதல்
# புதிய கற்கை நெறிகள் ஆரம்பம்!

## 2007 இலிருந்து இதுகாலவரை.....

**ஆங்கில மொழிக் கல்வியில் மிகவும்**
**பெறுமானமுள்ள வெற்றிகளைப் பெற்ற நாம்**
**தற்போது எமது கல்விநிலையத்தை**
**கணிதம் – பிரெஞ்சு – ஆங்கிலம்**
**என விரிவுபடுத்தியுள்ளோம்**

## Time Table for 2016/2017

| PRIMAIRE (TOUT NIVEAU) | COLLEGE (TOUT NIVEAU) | LYCEE (TOUT NIVEAU) |
|---|---|---|

- **COURS D'ANGLAIS** (Mercredis et Samedis)

Programmes de UNIVERSITY OF CAMBRIDGE BRITISH COUNCIL

| | |
|---|---|
| o Starters | 7, 8 ans |
| o Movers | 9, 10, 11 ans |
| o Flyers | 12, 13 ans |
| o KET | 13 ans et plus |
| o PET | |
| o FCE | |

- **SOUTIEN SCOLAIRE** (Mercredis et Samedis)
  (Tout niveau)
  - o Niveau Primaire (CP – CM2)
  - o Niveau Collège ($6^{ème}$ – $3^{ème}$)
  - o Niveau Lycée ($2^{nd}$ – Terminale)
- **COURS DE MATHEMATIQUES** (Samedis et Dimanches)
  - o Niveau Collège ($6^{ème}$ – $3^{ème}$)
  - o Niveau Lycée ($2^{nd}$ – Terminale)
- **COURS DE FRANÇAIS** (Tous les jours)
  - o Niveau Collège ($6^{ème}$ – $3^{ème}$)
  - o Niveau Lycée ($2^{nd}$ – Terminale)
- **COURS DE FRANÇAIS Pour adultes.** (Tous les jours)



10.09.2016 அன்று சேர்ஜியில் நடைபெற்ற
எமது 5வது ஆண்டு நிறைவு மற்றும் பட்டமளிப்பு விழாவிற்கு
வருகைதந்து சிறப்பித்த அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகள்

7, Rue Emile Zola,93120 La Courneuve.
**Renseignements et Inscriptions au 06 11 68 82 50 / 06 28 61 28 63.**

RER B : (La Courneuve Aubervilliers) ல் இருந்து 5 நிமிட நடைதூரம்
Métro : (La Courneuve) ல் இருந்து பஸ் இலக்கம் 173 ஊடாக வந்து Hemet தரிப்பிடத்தில் இறங்கவும்

# துயர் பகிர்வு



அமரர்
**சின்னத்தம்பி லீலாவதி**
(மண்கும்பான், 8ம் ஆண்டு)
தோற்றம் : 29. 11. 1952
மறைவு : 13 . 08. 2008



அமரர்
**பொன்னம்பலம் பொன்னுத்துரை**
தோற்றம் : 17. 05. 1943
மறைவு : 14. 07. 2016



அமரர்
**சிவலிங்கம் ஜெயதீபன்**
(யாழ். கம்பர்மலை, பிரான்ஸ்)
தோற்றம் : 18. 02. 1983
மறைவு : 29. 07. 2016



அமரர்
**கந்தசாமி ஜெயபாலன்**
(யாழ். புங்குடுதீவு, சுவிஸ்)
தோற்றம் : 18. 11. 1963
மறைவு : 01. 08. 2016



அமரர்
**நற்சீசியர் அலஸ்**
(திருகோணமலை)
தோற்றம் : 08. 02. 1939
மறைவு : 02. 08. 2016



அமரர்
**லோகநாதன் சிவஞானாம்பிகை**
(யாழ். ஈச்சமோட்டை, ஜேர்மனி)
தோற்றம் : 15. 11. 1948
மறைவு : 08. 08. 2016



அமரர்
**செல்லத்துரை பராசக்தி**
(வேலணை கிழக்கு, பிரான்ஸ்)
தோற்றம் : 13. 02.1933
மறைவு : 21. 08. 2016



அமரர்
**திருச்செல்வம் ஹென்றிக்ஹரிச்சன்**
(கிளிநொச்சி, பிரான்ஸ்)
தோற்றம் : 29. 03. 1960
மறைவு : 25. 08. 2016

## வாகனவேகக் கண்காணிப்புக் கமராக்கள் தொடர்பில்

# ஏனைய சாரதிகளுக்கு எச்சரிக்கை கொடுப்பது தவறல்ல.

அண்மையில் வழக்கொன்றைக் கையாண்ட பிரான்ஸின் மேன்முறையீட்டு உச்ச நீதிமன்றமே இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளது.

தெற்கு பிரான்ஸ் பிராந்தியமான Aveyronல் எங்கெல்லாம் வேகக் கண்காணிப்புக் கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன என்ற தகவலை முகப்புத்தகத்தில் ஒரு குழுவினர் தம் அங்கத்தவர்களிடையே பகிர்ந்துவந்துள்ளனர். இந்த முகப் புத்தகக் குழுவின் செய்தி பல ஊடகங்களில் தலைப்புச் செய்தியாகவும் விமர்சிக்கப்பட்டிருந்தது. ‘Aveyronஇல் எங்கெல்லாம் பொலிஸ் உள்ளார்கள் என்பதைக் கூறும் குழு' 14 அங்கத்தவர்களைக் கொண்டுள்ளனர். இவர்கள் கமராக்கள் பொருத்தப்பட்டுள்ள இடங்கள், பொலிஸ் அதிகாரிகள் சோதனை மேற்கொள்ளும் இடங்களைத் தொடர்ச்சியாக முகப்புத்தகத்தில் பதிவேற்றுவதன் மூலம் தமக்கிடையே பகிர்ந்துள்ளனர்.

நீதி மன்றத் தீர்ப்பு வழங்கப்படும் வரை இந்தப் 14 பேருக்கும் வாகனம் செலுத்துவதற்கான அனுமதி மறுக்கப்பட்டிருந்ததுடன் சாரதி அனுமதிப் பத்திரத்திலிருந்து புள்ளிகளும் நீக்கப்பட்டிருந்தன.

பிரான்சின் ஓட்டுனர் சட்டமானது, விதி மீறி வாகனம் செலுத்துவோரைக் கண்காணிக்க மேற்கொள்ளும் நடைமுறைகள், பொருத்தப்படும் கருவி கள் ஆகியவை தொடர்பில் தகவல் பரிமாற்றம் இடம்பெறுவதையோ அல்லது எச்சரிப்பதையோ "தடை செய்யவில்லை" என உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது. இருந்த போதிலும் கண்காணிப்புக் கமராக்கள் போன்ற பாதுகாப்பு நடைமுறை கருவிகளை (ராடர்களை) இனங்காணும் தொழில்நுட்பக் கருவிகளை சாதாரண பொதுமக்கள் பயன்படுத்துவது சட்டமீறல் எனவும் இதற்கு 1500யூரோக்கள் வரை தண்டப்பணம் அறவிடப்படும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளது.

# Burkini



இஸ்லாமிய சட்ட திட்டங்களுக்கு ஏற்ப உருவாக்கப்பட்ட நீச்சல் உடையாகும். முகம் உட்பட உடல் முழுவதையும் மறைத்து சில இஸ்லாமிய நாட்டுப் பெண்கள் அணியும் Burqa விலிருந்து «Bur»யையும் நீச்சலுடையாக Bikini யிலிருந்து «Kini»யையும் இணைத்து Burkini உடை உருவாகியுள்ளது. 2003 ஆம் ஆண்டில் லெபனானைச் சேர்ந்த அவுஸ்ரேலியா வாழ் ஆடை வடிவமைப்பாளரான Aheda Zanettiயினால் புர்கினி ஆடை வடிவமைக்கப்பட்டுள்ளது. இன்றுவரை 5 இலட்சத்திற்கும் அதிகமான புர்கினிகள் விற்பனையாகியுள்ளன. இஸ்லாமியப் பெண்கள் மட்டுமல்ல சூரியஒளித் தாக்கங்களைத் தவிர்ப்பதற்கும் பல பெண்களால் புர்கினி விரும்பி அணியப்படுகின்றது. மதச் சார்பற்ற பல விற்பனை நிலையங்களில் குறிப்பாக Marks and Spencer இல் கூட விற்பனை செய்யப்படுகின்றது.

பிரான்சில் இன்று புர்கினி சர்ச்சை தலைதூக்கியிருந்தாலும் இத் தடையுத்தரவு 2009ம் ஆண்டு Meauxஇல் அமுல்படுத்தப்பட்டது என்பதும் பிரான்சில் எந்தவொரு அரச பொது நீச்சல் தடாகங்களிலும் Burkini அணியத் தடை என்பது குறிப்பிடத்தக்கது.



அமரர்
**கந்தசாமி நேசமலர்**
(அராலி கிழக்கு, ஐயனார் கோயிலடி)
தோற்றம் : 16. 03. 1962
மறைவு : 25. 08. 2016



**செல்வன். வின்சன் யனிக்சன்**
(பிரான்ஸ்)
தோற்றம் : 06. 06. 2002
மறைவு : 08. 09. 2016



அமரர்
**மகாலிங்கம் குமுதினி**
(கரம்பன் கிழக்கு, பிரான்ஸ்)
தோற்றம் : 04. 06.1968
மறைவு : 11. 08. 2016


# நன்றி நவில்கிறோம்

அன்னை மடியில்

13 - 02 - 1933

ஆண்டவன் மடியில்

21 - 08 - 2016



## பராசக்தி அம்மா

**அம்மா!!**
உன் கருவறையில் நானிருந்து
உதைத்தது-உன்னை
நோகடிக்க அல்ல,
எட்டு மாதமாய் சுமக்கும் - உன்
முகம் பார்க்கவே.
பிஞ்சு வயதில் நான் அழுதது,
பசியினால் அல்ல,
பால் குடிக்கும் சாட்டில்-உன்
இதயத்தை முத்தமிட
பள்ளியில் என்னை சேர்க்கும்போது
நான் அழுதது
பயத்தினால் அல்ல,
உன் பாசத்தை பிரிகிறேனோ
என்ற பயத்தினால்.
இளமையில் நான் அழுதது
காதலில் கலங்கி அல்ல,
கல்யாணம் உன்னிடத்தில் இருந்து-என்னை
பிரிக்குமோ என்ற பயத்தினால்..
நான் விமானம் ஏறும்போது அழுதது
பிரிகிறேன் என்றல்ல,
நான் உழைத்து உன்னை
பார்க்கப்போகிறேன்-என்ற
ஆனந்தத்தில்..
இங்கு தனிமையில் அழுகிறேன்,
உறவுகள் இல்லாமல் அல்ல
உன் தாய் அன்பு காணாமல்..
அம்மா!!
உன் இறப்பின் பின் நான் அழுகிறேன்-நீ
இறந்ததால் அல்ல,,
உலகில் பாசமே இறந்ததால்..

**எங்கள் அம்மாவின் பிரிவுத்துயரினை பகிர்ந்து
இறுதிக்கிரியை, அஞ்சலி மற்றும் அந்தியேட்டி நிகழ்வுகளில் கலந்துகொண்ட
அனைத்து உறவுகளுக்கும் - எங்கள்
இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.**

அமரர் திருமதி. செல்லத்துரை பராசக்தி
குடும்பத்தினர்


# அதிபர் François Mitterrand உருவம் பொறித்த இரண்டு யூரோ நாணயங்கள்

**பிரான்சின்** அரசியல் பரப்பில் இடது சாரிய பாரம்பரியத்தின் முதன்மை யானவரும், பிரான்ஸ் குடியரசின் 21வது அதிபருமான *François Mitterand* மீண்டும் கௌரவிக்கப்பட்டுள்ளார். 1996ஆம் ஆண்டு மரணித்த அதிபர் *François Mitterand* உருவம் பொறித்த இரண்டு யூரோ நாணயங்கள் Monnaie de Parisஇனால் வெளியிடப்பட்டுள்ளன.

*François Mitterand* நான்காவது குடியரசில் பதினொரு தடவைகள் அமைச்சராகச் செயற்பட்டவர். 1947ஆம் ஆண்டு தனது 31வது வயதில் போரால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் முன்னாள் படைவீரர்கள்சார்துறை அமைச்சராக ஆரம்பித்து உட்துறை, நீதித் துறை என பிரான்சின் பல முக்கிய துறைகளில் செயற்பட்டவர். தவிர பிரான்சின் மத்திய பகுதியில் அமைந்துள்ள Niévre நகர பாராளுமன்ற உறுப்பினராக, இரண்டு முறையாக 31 ஆண்டுகள் செயற்பட்டார். பின்னர் 1981ம் ஆண்டு முதல் 1995வரை 14 வருடங்கள் பிரான்சின் ஒப்பற்ற அதிபராக ஆட்சி புரிந்தார்.



பிரான்சில் மரண தண்டனை ஒழிப்பு முதல் அரசியல் சமூக கலாச்சார மற்றும் மனித நேய ரீதியாக பல மாற்றங்களை நிகழ்த்தினார். இன்றைய லூவர் அருங்காட்சியகம் பஸ்ரி ஒப்பேரா மண்டபம், La defense வளைவு (L'Arche) பிரான்சின் தேசிய நூலகமான *Bibliothèque Nationale François Mitterrand* ஆகியவை அதிபரின் பெயர் சொல்லும் வளர்ச்சிப் பணிகளாகும்.



*François Mitterand* பிறந்து 100 வருடங்கள் மற்றும் இறந்து 20 வருடங்கள் ஆகியவற்றை நினைவு கூரும் முகமாக 2 யூரோ நாணயம் வெளியிடப்பட்டுள்ளது. *Mitterand* அவர்களின் உருவம்பதித்த 2 யூரோ நாணயத்தை 12, 95 யூரோக்கள் செலுத்தி ஒன்லைன்மூலம் பெற்றுக் கொள்ளலாம்.







# Jour du dépassement

**பூமியில்** வாழும் உயிரினங்கள் அனைத்திற்கும் ஒரு வருடத்திற்கு தேவைப்படும் உணவின் அளவு கணிப்பிடப்பட்டிருக்கின்றது. இயற்கையிலிருந்து பெற்றுக் கொள்ளும் உணவு வளங்கள் அனைத்தையும் அடிப்படையாக வைத்தே இது கணிக்கப்படுகின்றது. அதனடிப்படையில் ஆகஸ்ட் 8ம் திகதியுடன் இந்த வருடம் முழுவதிற்குமென கணிக்கப்பட்டிருந்த உணவுப்பொருட்கள் அனைத்தும் முடிக்கப்பட்டுவிட்டன.




இந்த நாளையே Earth Overshoot day என அழைக்கின்றார்கள். பூமி தன்னால் இதற்கு மேல் உழைக்கமுடியாது எனக் கூறும் நாள்! இந்த நாள் 2000ம் ஆண்டில் ஒக்டோபர் முதலாம் திகதியாகவும், 2008இல் செப்டெம்பர் 23ம் திகதியாகவும் 2015இல் ஓகஸ்ட் 13ம் திகதியாகவும் இருந்துள்ளது. இந்நாள் 1970ம் ஆண்டில் டிசம்பர் 23ம் திகதியாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

ஆகஸ்ட் 8ம் திகதியுடன் இந்த வருடம் முழுவதற்கும் தேவைப்படும் உணவுப்பொருட்கள் அனைத்தும் தீர்ந்துவிட்டது! அதற்குப் பின்னர் நாம் உண்ணும் உணவுகள் அனைத்தும் 2017ம் ஆண்டுக்கான இருப்பு உணவுகளாகும். உதாரணத்திற்கு ஓகஸ்ட் 8க்குப் பின்னர் எமக்காகக் கடலில் பிடிக்கப்படும் ஒவ்வொரு மீனும் 2017இல் பிடிக்கவேண்டியவை. இவை முழுமையான வளர்ச்சியை எட்டாத மீன்கள் ஆகும்.

தற்போதைய நிலையில் மனிதனின் தேவையோடு ஒப்பிடும் போது இயற்கை வளங்களின் மீளுருவாக்கம் அல்லது மீள் உற்பத்தித் தகைமை மிகவும் குறைவாகவே உள்ளது. கட்டுக்கடங்காமல் பெருகிவரும் சனத்தொகை, இயற்கையின் மீளுருவாக்கத்தில் மனிதன் செய்யும் இடையூறுகள், குறிப்பாக சூழல் மாசடைவு மற்றும் அதீத நுகர்வு (வீண் விரயமும்) போன்றவையாகும். எமது அதீத நுகர்வை பூமியின் மீளுருவாக்கத்தை அதிகரிப்பதன் மூலம் ஈடுகட்டினாலும் சூழல் மாசடைவுகளைக் கட்டுக்குள் கொண்டுவராத பட்சத்தில் இந்நிலை ஒரு போதும் சாத்தியமாக வாய்ப்பில்லை!








ஒக்ரோபர் மாதத்திலிருந்து பிரான்சின் அனைத்து புகையிரதங்களிலும் ஆயுதங்களுடன் பாதுகாவலர்கள் பயணிக்கவுள்ளனர். பொலிசாரின் ஒத்துழைப்புடன் சாதாரண உடைகளில் இவர்கள் பயணிப்பார்கள்.

கடந்த வருடம் ஆம்ஸ்ரடாமுக்கும் பாரிசுக்கும் இடையே புகையிரதத்தில் ஏற்பட்ட துப்பாக்கிப் பிரயோக சம்பவத்தைத் தொடர்ந்தே இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது. தற்போது இதற்கான சட்டம் இயற்றப்பட்டு அமுலாக்க அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது. பிரான்ஸ் சட்டத்தை மாற்றியமைப்பதில் உள்ள சிக்கலான நடைமுறைகளாலும் பாதுகாவலர்களைப் பயிற்றுவிக்கக் காலம் தேவைப்பட்டதாலுமே இந்தப் புதிய நடைமுறையை அறிமுகப்படுத்த கால தாமதம் ஏற்பட்டதாக கூறப்படுகின்றது.

பாரிசின் பிராந்திய புகையிரதங்களிலும், TGV புகையிரதங்கள் மற்றும் குறுந்தூர புகையிரதங்களிலும்கூட இந்தப் பாதுகாப்பாளர்கள் ரோந்து செல்லவுள்ளனர். இவர்கள் துப்பாக்கிச் சூட்டுப் பயிற்சி வழங்கப்பட்டு, ஆயுதங்களுடன் நடமாடினாலும்கூட மிக அவசியமான சந்தர்ப்பங்களிலும் தாக்குதல் சந்தர்ப்பங்களில் மட்டுமே அவற்றைப் பயன்படுத்த பணிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் பயணிகளின் அடையாளப் பத்திரத்தைக் கோரவும் கொண்டு செல்லும் பொதிகளைப் பரிசோதிக்கவும் இவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட 3000 வரையிலான பாதுகாவலர்கள் இவ்வாறு பணிக்கு அமர்த்தப்படவுள்ளனர்.

நாங்கள் மிகவும் முட்டாள் தனமாக செலவிடும் நேரம் எதுவென்றால், எங்களை தவறாக புரிந்துகொண்டவர்களுக்கு நாங்கள் தவறானவர்கள் இல்லையென நிரூபிக்க செலவிடும் நேரமே!




# Départements
## பிரான்ஸ் – பிராந்தியங்கள்

பிரான்ஸ் நாடானது 101 நிர்வாகப் பிராந்தியங்களாக (Départements) பிரிக்கப்பட்டுள்ளது. இந்த départements தொடர்பான **மேலும் சில தகவல்கள் ....**

- 96 départementகள் பிரான்ஸ் நாட்டுக்குள் உள்ளன.
- ஏனையவை தென் அமெரிக்காவில் உள்ள Guyane française கரீபியனில் உள்ள Guadeloupe மற்றும் Martinique, இந்து சமுத்திரத்தில் உள்ள Mayotte மற்றும் Réunion ஆகிய ஐந்து départementகள் ஆகும்.
- ஒரு départementல் உள்ள சராசரி சனத்தொகை 524, 144. (அமெரிக்காவில் உள்ள ஒரு கவுன்ரியை விட 21 மடங்கு அதிகமாகும்)
- சனத்தொகை அதி கூடியது Nord (2.6 மில்லியன் மக்கள்)
- சனத்தொகை அடிப்படையில் இரண்டாவது இடத்தைப் பெறுகின்றது பாரிஸ் (2.2 மில்லியன் மக்கள்)
- ஆகக் குறைந்த சனத்தொகை கொண்டது Lozère (77, 000 மக்கள்)
- பரப்பளவில் பெரியது Guyane française (இது பிரான்சுக்கு வெளியில் உள்ளது – 83, 535 சதுர கிலோமீற்றர்)
- பிரான்சின் எல்லைக்குள் பரப்பளவில் பெரியது Gironde (10, 725 சதுர கிலோமீற்றர்)
- **பரப்பளவில் ஆகச் சிறியது பாரிஸ்** (105 சதுர கிலோமீற்றர் மட்டுமே)
- ஆனால் மக்கள்செறிவு கூடிய பிராந்தியமும் பாரிஸ் தான். ஒரு சதுர கிலோமீற்றரில் சராசரியாக 21, 234 பேர் வாழ்கின்றனர்.
- அதேநேரம் Lozère départementல் ஆக 15 பேரே ஒரு சதுர கிலோமீற்றரில் வாழ்கின்றனர்.
- 1968ஆம் ஆண்டுவரை பாரிஸ் départment "செயின்" என அழைக்கப்பட்டது. (நதியை அடையாளப்படுத்தும் வகையில்)
- Département வரைபடம் முதலில் 1791இல் உருவாக்கப்பட்டது.
- **68 départementகள் அந்த இடங்களில் உள்ள முக்கிய நதிகளின் பெயரைக் கொண்டுள்ளன.** ஆனாலும் தெற்கில் உள்ள Var département, Var நதியின் பெயரைக் கொண்டிருந்தாலும் Var நதி அந்த départementக்கு உரியதும் அல்ல. அங்கு ஒடுவதும் இல்லை.
- அவ்வாறே 12 départementகள் அந்த இடங்களில் உள்ள மலை அல்லது மலைத்தொடரின் பெயரைக் கொண்டுள்ளன.
- ஒரு département மட்டும் திசையைப் பெயரில் கொண்டுள்ளது. வட திசையில் உள்ளதை குறிப்பிட்டு Nord என அழைக்கப்படுகின்றது.
- முதல் பிரான்ஸ் சாம்ராஜ்யம் பரந்துபட்டிருந்த காலத்தில் 130 départementகள் காணப்பட்டன. ஆனால் 1814 – 1825இல் நெப்போலியன் தோற்கடிக்கப்பட்டதைத் தொடர்ந்து 86 ஆகக் குறைக்கப்பட்டது.
- வறுமை கூடிய இடமாக Seine-Saint-Denis département காணப்படுகின்றது. (20.7 வீதமானவர்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ளவர்கள்)




## French Kissing:

பிரான்ஸ் நாட்டவர்கள் தான் முதலில் இப்படி முத்தமிட்டுக்கொண்டார்கள் என்பதற்கு எந்த சான்றும் இல்லை. இவ்வாறு கூறினால் யாரும் ஏற்றுக்கொள்ளப்போவதுமில்லை. ஆனாலும் அன்பைப் பொது இடங்களில் வெளிப்படுத்த முதலில் அனுமதித்த நாடுகளில் பிரான்சும் ஒன்று என்பது மட்டுமே இந்தச் சொல்லின் தோற்றத்திற்கு வலுச் சேர்த்தது. பொது இடங்களில் முத்தமிட்டுக்கொள்வதை விரும்பாத பழமைவாத பிரித்தானியர்களே French Kissing என அழைத்துக்கொண்டார்கள். முதலாம் உலகப் போர் முடித்து வீடு திரும்பிய போர் வீரர்களாலேயே இந்தச் சொல் அறிமுகப்படுத்தப்பட்டதாக நம்பப்படுகின்றது.




16.oct. 2016


## நிலா குறுக்கெழுத்துப் போட்டி – இல. 25



**மேலிருந்து கீழ்**

1. கடுமையான அடக்கு முறைகளைக் கையாண்டு நடாத்தப்படும் ஆட்சி (5)
3. சிவபெருமான் ஆடியது (5)
4. பெரும்பாலும் விவசாயத்தில் பூச்சிகளை அழிக்கப்பயன்படுவது (6)
5. மலேசியத்தமிழர்களின் உரிமைக்காகப் போராடிய ரஜனிகாந்த் திரைப்படம் (3) தலைகீழாக உள்ளது
6. அரேபியர்களால் செரெண்டிப் என அழைக்கப்பட்ட நாடு (4)
7. இதை நிலப்படம் அல்லது தேசப்படம் என்று கூட அழைக்கலாம் (5)
8. விநாயகர் (4)
9. இது சிறிது என்றாலும் காரம் பெரிது என்பர் (3)
10. ஏழு நாட்கள் (3)
13. திரைப்படம் (3)
14. வயதாக வயதாக இது அடிக்கடி ஏற்படும் (3)
15. திருடனின் பெண்பால் (3) (குழம்பியுள்ளது)
16. உடலில் நீரின் அளவு குறைந்தால் ஏற்படுவது (3) (தலைகீழாக உள்ளது)
17. மாடம் (2)
18. வீதி (2) (தலைகீழாக உள்ளது)

**இடமிருந்து வலம்**

1. பெண்கள் கணுகாலில் அணியும் நகை (3)
2. முன்பு கிராமங்களில் தலைச்சுமையை இறக்க அமைக்கப்பட்ட கற்றூண்களிலான அமைப்பு (5)
4. பயம் (2)
11. தேசம் (2)
12. விரோதம் (2)
14. பூமியின் துணைக்கோள் (2)
15. புலமை (3)
17. சூரியன் கிழக்கில் உதித்து மேற்கில் மறையும். இந்த மறைதல் நேரத்தை இவ்வாறு அழைக்கலாம் (2)
19. இது சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றது என்பார்கள் (5)
20. ஆண்கள் காதலில் தோல்வியடைந்தால் இதை முதலில் வளர்ப்பார்களாம் (2)

**வலமிருந்து இடம்**

10. அங்க அசைவுகளால் சிரிக்க வைத்திடும் கோமாளி (4) (மாறியுள்ளது)

✔ உங்கள் பதில்களை 10 கார்த்திகை 2016 இற்கு முன்னர் அனுப்பிவைக்கவும்

**நிலா குறுக்கெழுத்துப்போட்டி இல.24ல் பரிசு பெறுபவர்கள்.**

1. ராஜேஸ்வரி தங்கராஜா – Aulnay Sous Bois
2. திருமாவளவன் தினேஸ் – பாரிஸ் 12
3. வினோதினி செல்வரட்ணம் – Argenteuil

**சரியான விடை எழுதியவர்கள் :**

- தவநேசன் – Stains
- யோகேஸ்வரன் – Drancy
- தனிசியா நேசராஜன் – Livry
- புனிதன் கனகசிவம் – Pontault combault


இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு

# Autre Vue

OPTICIEN

*Donnez un sens à votre Regard*

## பாரீஸ் மாநகரில் தமிழ் மக்களின் நன்மை கருதி
## இளைய தலைமுறையின் புதியதோர் உதயம்

சிறியோர் முதல் பெரியோர் வரை சகலவிதமான நவீனரக மூக்குக்கண்ணாடிகள், லென்ஸ் வகைகள் மேலும் பலவிதமான நவீன கோடைகாலக்கண்ணாடி வகைகள் சர்வதேச தரமானதாகவும் மலிவானதாகவும் உங்கள் விருப்பம் போல் தெரிவு செய்து பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே நம்பிக்கையான தமிழர் நிறுவனம் Autre Vue அத்துடன் உங்களுக்கான இலவச ஆலோசனைகள் எப்பொழுதும் வழங்கப்படும்.



23 rue lamartine - 75009 PARIS
Tél / Fax : 09 67 33 12 83 - 01 53 20 04 10
email : autrevueparis09@gmail.com
Ouvert du Lundi - Samedi de 10h00 à 20h00

58 AV FLANDRES - 75019 PARIS
Tél / Fax : 09.66.91.54.04 - 01.42.30.54.04
email : autrevueparis19@gmail.com
Ouvert du Lundi - Samedi de 10h00 à 20h00



# அருள்மிகு
# பாரிஸ் முத்துமாரி அம்மன்



26, Rue du Département - 75018 PARIS
(M°: La Chapelle / Marx Dormoy)

**அம்பிகை அடியார்களே!**

பல வளங்களாலும் சிறப்புற்று விளங்கும் சுவர்ணபூமி எனப் பெயர் பெற்ற பிரான்ஸ் மாநகரத்தில் பாரிஸ் லாச்சப்பலில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் பரம்பொருளாம் அருள்மிகு முத்துமாரி அம்மனும், ஈழத்தில் பிரசித்தி பெற்ற அருள்மிகு நயினை நாகபூசணி அம்பாளும் அருள்பாலித்து வருகின்றார்கள்.

தொடர்ந்து 20 வருடங்களுக்கு மேலாக சைவ ஆகம முறைப்படி அம்பாளுக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று வருகின்றன.

நீங்களும் ஆலயத்திற்கு வருகைதந்து அம்பாளை வழிபட்டு சகல இஷ்ட சித்திகளை பெற்று பேரின்ப பெருவாழ்வு வாழ்வீர்களாக!

## ❖ விசேட தினங்கள் ❖

01.10.2016 சனி **நவராத்திரி விரதாரம்பம்** / புரட்டாதிச்சனி 3வது வாரம்

08.10.2016 சனி புரட்டாதிச்சனி 4வது வாரம்

10.10.2016 திங்கள் **சரஸ்வதிபூஜை இறுதிநாள் ஆயுதபூஜை**

11.10.2016 செவ்வாய் **விஜயதசமி**, ஏடு தொடக்குதல், மாலை 4 மணிக்கு மானம்பூ
**கேதாரகௌரிவிரதம் ஆரம்பம்**

15.10.2016 சனி புரட்டாதிச்சனி 5வது வாரம்

29.10.2016 சனி தீபாவளி

30.10.2016 ஞாயிறு **கேதாரகௌரி விரதபூர்த்தி, காப்புக்கட்டுதல்**

31.10.2016 திங்கள் **கந்தஷஷ்டி விரதாரம்பம்**

05.10.2016 சனி **கந்தஷஷ்டி விரதபூர்த்தி**

06.10.2016 ஞாயிறு காலை **பாறனை பூசை**
மாலை முருகனுக்கு திருக்கல்யாணம் மாலை 4.30 மணி

கேதாரகௌரி விரதம் அனுஷ்டிப்பவர்கள் காரியாலயத்தில் தொடர்புகொண்டு முன்கூட்டியே உங்கள் பெயர்களைப் பதிவுசெய்துகொள்ளலாம். - நிர்வாகம்

**சமய வகுப்புகள்**
**எமது ஆலயத்தில்**
**சைவசமய வகுப்புகள்**
**இலவசமாக**
**நடைபெறுகின்றன**

தொடர்புகளுக்கு
01 40 38 30 75

**கொழும்பு விவேகானந்தசபை**
**சமயப்பரீட்சைக்கு**
**பிரான்சிலிருந்தும் தோற்றலாம்!**

- எம்மிடம் 90 மாணவர்கள்வரை சமயம் கற்கிறார்கள்.
- கடந்த ஆண்டு (2015) ல் எம்மிடம் பயின்ற 26 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றினார்கள். இதில் 25 மாணவர்கள் சித்திபெற்றார்கள்.
- 13.11.2016 ல் நடைபெறவுள்ள பரீட்சைக்கு எமது ஆலயத்திலிருந்து 40 மாணவர்கள் தோற்றவுள்ளனர்.

# WWW தோற்றம் பெற்று 25 வருடங்கள்

World wide Web - பரந்து விரிந்த வலைவியனுலகு இன்று எந்தவொரு இணைய முகவரிக்கு முன்னும் நிரந்தரமாக ஒட்டிக்கொண்டு விட்ட மூன்று எழுத்துக்கள் WWW உருவம் பெற்று 23 ஆகஸ்ட் 2016 அன்று 25 வருடங்களாகும்.

இங்கிலாந்தைச் சேர்ந்த Sir Tim Berners Lee என்பவரால் ஐரோப்பிய அணு ஆராய்ச்சி மையத்தில் (Cern) இல் வைத்து அறிமுகப்படுத்தப்பட்டது. இன்றும் CERN மையத்தில் "இங்கு தான் இணையம் உருவானது" எனும் வாக்கியம் பதிக்கப்பட்ட நினைவுத்தகட்டைக் காணமுடியும்.

சுவிசில் இயங்கும் ஐரோப்பிய அணு ஆராய்ச்சி மையத்தில் Tim Berners Lee க்கு கணினி வலையமைப்புத்துறை ஆய்வாளர் பணி. உலகளவில் மிகப்பாரிய அணு ஆராய்ச்சி மையமான CERNல் பல குழுக்கள், பல நாடுகளில் ஒரு திட்டத்துக்காகச் செயற்படும் போது அவர்களுக்கிடையிலான தகவல் பரிமாற்றங்களில் நீண்ட தாமதங்களும், குழப்பங்களும் ஏற்பட்டன. அவற்றை நிவர்த்தி செய்வதற்காக தகவல்களின் உடனடிப் பரிமாற்றங்களைக் கருத்திற்கொண்டு முதலாவது இணையம் ஆரம்பமானது. info.cern.ch இதுவே உலகின் முதலாவது இணையத்தளமாகும்.

1991 வரை இன்டர்நெட் உபயோகம், மின் அஞ்சல் மற்றும் IP வழி தொலை பேசி சேவைகளுக்காக மட்டுமே இயங்கியது. 1991க்குப் பின்னரே இன்டர்நெட் வழியாக இணையத்தளம் எனும் பெருங்கனவு Tim Berners Lee மூலம் சாத்தியப்பட்டது என்பதும், இன்று நாம் உபயோகிக்கும் இணையத்தள உலவிகள் (Navigateurs) வழியான இணையப்பக்கங்களின் தோற்றம் 1993ம் ஆண்டுக்குப் பின்னரே உருவகம் பெற்றன என்பதும் குறிப்பிடத்தக்கது. 1993ல் தான் ஐரோப்பிய அணு ஆராய்ச்சி மையம் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்த WWW இணைய அமைப்பை அனைவருக்குமான பொதுப்பாவனைக்கு அனுமதித்தனர்.

பின்னர் பல கணினித்துறை வல்லுனர்களின் மேம்பாட்டினால் வலை உலாவிகள் (Navigateurs) உருவகம் பெற்றன. முதலாவது உலாவி NCSA MOSAIC ஆகும். பின்னர் Netscape ஆக மாற்றம் பெற்று இன்று Mozilla Firefox என அழைக்கப்படுகின்றது.

1993ல் பொதுப்பாவனைக்கு நகர்ந்து 1994ல் பத்து மில்லியன் இணையப் பாவனையாளர்கள் எனக் கிடுகிடுவென வளர்ச்சி பெற்ற இணையங்கள் இன்று இணையம் இல்லையேல் உலகம் இல்லை என்ற நிலைக்கு வந்துவிட்டது. இப்பெருமைகளுக்கெல்லாம் மூலகர்த்தாவான 58 வயதாகும் Tim Berners Lee இன்றும் இணையத்தள வளர்ச்சி மற்றும் மேம்பாட்டு தொடர்பான அமைப்பான World Wide Web Consortium (W3C) யின் தலைவராக தொடர்ந்தும் செயற்பட்டு வருகிறார்.

## வலது சாரியக் கட்சியின் முதற்சுற்று வேட்பாளர் பட்டியல்

வலது சாரிய அமைப்புக்களின் உயர் அதிகார சபை முதற்சுற்று வேட்பாளர் பட்டியலை உறுதிப்படுத்தியுள்ளது. முதற் சுற்றுக்கு 7 வேட்பாளர்கள் கொண்ட பட்டியலை அங்கீகரித்து தேர்தல் பிரச்சாரங்களுக்கான அதிகாரபூர்வ அனுமதியையும் வழங்கியுள்ளது.

Les Républicains பாராளுமன்ற உறுப்பினரான Hervé Maritonஇன் விண்ணப்பம் உயர் அதிகார சபையால் நிராகரிக்கப்பட்டுள்ளது. பிரச்சாரங்கள் மற்றும் 3 தொலைக்காட்சி நேர் விவாதங்களைத் தொடர்ந்து நவம்பர் மாதம் 20 மற்றும் 27ஆம் திகதிகளில் 10228 வாக்களிப்பு நிலையங்களில் இரண்டு சுற்றாகத் தேர்தல் நடைபெறவுள்ளது.



வேட்பாளர்கள்:

- நிக்கோலா சார்கோசி – முன்னாள் அதிபர்
- Alain Juppé – போர்தோ நகர மேஜர்
- François Fillon – முன்னாள் பிரதமர், கல்வி அமைச்சர், தொழிற்துறை அமைச்சர்
- Nathalie Kosciusko Morizet – முன்னாள் சூழலியல்துறை அமைச்சர்
- Jean-François Copé - UMP கட்சியின் முன்னாள் தலைவர்
- Bruno Le Maire - முன்னாள் அமைச்சர், தற்போதைய பாராளுமன்ற உறுப்பினர்
- Jean-Frédéric Poisson - பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சித் தலைவர்.


MÉTRO MARX DORMOY க்கு அருகில்

SN SUBA TEL

இலங்கை, இந்தியா உட்பட உலகில் வாழும் உங்கள் உறவுகளின் கைத்தொலை பேசிக் கட்டணத்தை (ரீச்சார்ஜ்) எம்மூடாக செலுத்திக்கொள்ளலாம்

PHONE
FAX
INTERNET
PHOTOCOPIE
IMPRESSION
ACCESSOIRES
SCANNER
RELIURE
PLASTIFICATION
DÉVELOPPEMENT PHOTO

SRILANKA : Sri Lanka Telecom Mobitel Dialog airtel
INDIA : airtel vodafone RELIANCE Mobile idea Virgin mobile

Ria Money Transfer
WESTERN UNION WU moving money for better
MoneyGram

26, Rue de Torcy - 75018 Paris (Bus:35,60 (Arrêt : Place de Torcy) Tél: 06 45 28 27 32 Fax : 01 80 81 48 99

லாச்சப்பலில்...

# Gooday

Gooday

## Centre de Beauté



- மணப்பெண் அலங்காரம்
- மருதாணி அலங்காரம்
- நக அலங்காரம்
- கண்புருவம் வழவமைத்தல்
- பேசியல்,
- தலைக்கான ஒயில் மசாஜ்

போன்ற அனைத்து

அழகுசேர் வேலைகளிற்கும்..

உங்கள் அழகுக்கு

அழகு சேர்க்க

*எம்மை நாடுங்கள்!*



**மணப்பெண் அலங்காரம்**
**உங்கள் இல்லங்களுக்கு வந்தும்**
**செய்துதரப்படும்**

**Tél.: 01 42 05 78 67**

*208 Bis, Rue du Fbg St-Denis, 75010 Paris*

('சிங்கப்பூர் சில்க்' இற்கு அருகாமையில்)



# Océane நவீனரக புதிய TGV

**40 புத்தம்புதிய** அதிவேக உயர்தொழில்நுட்ப புகையிரதங்கள் மிக விரைவில் ஓடுபாதைகளை அலங்கரிக்கவுள்ளன. SNCF இனால் அறிமுகப்படுத்தப்படவுள்ள «Océane» என அழைக்கப்படும் TGV trainகளை Alstom நிறுவனம் வடிவமைத்துள்ளது. 320கிமீ வேகம், திசை மாற்றக்கூடிய 556 பயணிகள் இருக்கைகள் (ஏற்கனவே உள்ளதை விட 22வீதம் அதிகம்), கூடிய இடவசதி, இலவச Wi-Fi சேவை, தனித்தனி phone charging points, பயணம் தொடர்பான உடனடி தகவல் ஒலிபரப்பு, எனப் பல வசதிகளுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. Gare de Montparnasseஇல் இதன் ஆரம்ப திறப்புவிழா இடம்பெற்றிருந்தாலும் இதன் கன்னிப் பயணம் டிசம்பர் 11 பாரிசுக்கும் துலூசுக்கும் இடையில் இடம்பெறும். அடுத்த வருடத்திலிருந்து Bordeaux விற்கும் பாரிசுக்கும் இடையில் இதில் 17 புகையிரதங்கள் சேவையில் ஈடுபடவுள்ளன.

WhatsApp

# ஐரோப்பாவில் WhatsApp பாவனை தடைசெய்யப்படலாம்!

Facebook, WhatsApp ஆகிய பெரும் தொடர்பாடல் நிறுவனங்கள் தமக்கிடையே பாவனையாளர்களின் தனிநபர் தகவல்களைப் பரிமாற்றம் செய்யவுள்ளதாகக் கூறியிருப்பது ஐரோப்பிய சட்ட வல்லுனர்களைப் பெரிதும் கோபத்திற்கு உள்ளாக்கியுள்ளது. தகவல் பாதுகாப்பு தொடர்பான ஐரோப்பிய அமைப்புக்கள் அனைத்தும் இரு நிறுவனங்களினதும் செயற்பாடுகள் குறித்து கூர்ந்து கவனித்துவருவதாகக் குறிப்பிட்டுள்ளன. இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் விடயங்கள் தொடர்பில் சொல்லுக்குச் சொல் ஆராய்ந்து முடிவெடுக்கவுள்ளதாக ஐரோப்பிய அமைப்புகள் தெரிவித்துள்ளன. சட்ட விதிகளை மீறும் படியான சொற்பிரயோகமோ, நோக்கமோ இருக்குமாயின் ஐரோப்பாவில் WhatsAppஇன் பாவனை தடைசெய்யப்படும் என அறிவித்துள்ளனர். 2014இல் WhatsApp நிறுவனத்தை Facebook 19 பில்லியன் டொலர்களுக்கு வாங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

வாழ்க்கையை உனக்கென்று வாழ்ந்து பார்!
எத்தனை ருசியானது என்று தெரியும்!
**அதில் கொஞ்சம் பிறருக்காகவும்** வாழ்ந்துபார்!
எத்தனை அர்த்தமுள்ளது என்று புரியும்!


இலங்கை தமிழ் பழையமாணவர் ஒன்றியம்
www.uaets-france.fr
கணக்கு விபரங்களை இணையத்தில் பார்வையிடலாம்.

நிலா
நிலாவினைப்பெற்றுக்கொள்ள..

சங்கீதா அச்சகம்
39, Bld. de la Chapelle - 75010 PARIS

ரூபி அச்சகம்
10, Rue Labat - 75018 PARIS

CHANGE MAGENTA
77, Bld. de Magenta - 75010 PARIS

ASI BOUCHERIE
195, Rue du Fbg.St.Denis - 75010 PARIS

தமிழ்ச்சோலை -பாரிஸ் 17
Gooday
208, Rue du Fbg.St.Denis - 75010 PARIS

யாழ் இறைச்சிக்கடை
6, Rue Perdonnet - 75010 PARIS

SACHI EDUCATION
70, rue Philippe de Girard - 75018 PARIS

NRS COIFFURE
5B, Av. Alexis Varagne - 95 Villiers le Bel

ராக ஜோதி மளிகை
C.C Pte de la Ville - 95140 Garges Les Gonesse.

மாயவர் - மொழிபெயர்ப்பு
7, Rue Perdonnet (M°: La Chapelle)

MGR VIDEO
5, Rue Perdonnet - 75010 Paris

தமிழாலயம்
19, Rue Cail, 75010 Paris

மாலா மளிகை
4, Place de Salengro - Garges les Gonesse

அறிவாலயம் புத்தகசாலை
7, Rue Perdonnet (M°: La Chapelle)

Karan Coiffure
203, Rue de Fbg St.Denis (M°: La Chapelle)

SHAEE CASH & CARRY
193, Rue de Fbg St.Denis (M°: La Chapelle)

RESTAURANT PARADISE
10, Av. Louis Aragon, Bobigny (M°: Bobigny)

ஞானமணி பல்பொருள் அங்காடி
218, Rue. Anatole Francy - 93 Drancy

அம்பாள் ஸ்ரோஸ்
192, Rue du Fbg.St.Denis - 75010 PARIS

தமிழ்ச்சோலை - தமிழ்ச்சங்கம்
Le Blanc Mesnil (93), Clichy (92)

அஷ்டலக்சுமி கோயில்
1, Rue Ledru Rollin - 94600 Choisy le Roi

Sagana Coiffure
64, Rue Louis Blanc (M°: La Chapelle)

கிருஷ்ணா அச்சகம்
73, Rue Doudeauville - 75018 Paris

GADS EXO
14, Bis, rue Emile zola 93400 St.Ouen
M°: Pte de St. Ouen)

தீவக செய்திகளை அறிய..
www.Allaiyoor.com







# பிரான்சின் புதிய அரசியற் கட்சி

**2016ஆம் ஆண்டு** ஏப்ரல் 6ஆம் திகதி பிரான்சின் புதிய அரசியல் இயக்கமாக En Marche! உதயம் பெற்றது. இதன் தோற்றுவிப்பாளர் பொருளாதாரத்துறை அமைச்சர் Emmanuel Macronஆகும். நிறுவுனரின் E மற்றும் M முதலெழுத்துக்களில் கட்சியின் பெயர் உருவாகியுள்ளது.

பிரான்சின் உயர் கல்வியகங்களில் ஒன்றான ENA (Ecole Nationale d'Administration) மாணவனும் நிதித்துறை ஆய்வாளராக முதலீட்டு வங்கியொன்றின் உயர் அதிகாரியாகப் பணியாற்றியவருமான Emmanuel Macronன் அரசியல் வருகை 2012ஆம் ஆண்டு அரங்கேறியது. அதிபர் பிரான்சுவா ஹொலந்தின் தேர்தல் பிரச்சாரங்களுக்காகப் பணியாற்ற அழைக்கப்பட்டார். தொடர்ந்து இரண்டு வருடங்கள் அதிபரின் அலுவலகமான Elysée இல் அதிபரின் பிரத்தியேக ஆலோசகராகவும் 2014ம் ஆண்டு அதிபரின் நேரடி அழைப்பில் பிரான்சின் மிக இளம் அமைச்சராகப் பதவியேற்றார். பொருளாதாரம் தொழிற்றுறை மற்றும் டிஜிற்றல் துறை என பிரான்சின் முதுகெலும்பான மூன்று முக்கிய துறைகளும் இவர் வசமாகின! ஆயினும் நீண்டகாலம் அது நிலைக்கவில்லை.

En Marche! கட்சியின் அரசியல் சித்தாந்தமாக சமூக சுதந்திரவாதத்தை அறிவித்துள்ளனர். சோசலிசக் கட்சியாளரான Macron, எனக்கு இடதுசாரி x வலதுசாரி ஒற்றைக் கருத்துக்களில் நம்பிக்கை இல்லை எனவும் இரண்டுக்கும் இடைப்பட்ட அரசியல் நிலைப்பாடுகளை முன்னெடுக்கும் கட்சியாகவே எமது கட்சி செயற்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

En Marche! வருகை பல அரசியல் தலைவர்களால் மிகவும் பாராட்டப்பட்டது. குறிப்பாகக் கல்வி அமைச்சர் Najat Vallaud-Belkacem அதிபர் பிரான்சுவா ஹொலந், முன்னாள் பிரதமர் Jean-Pierre Raffarin ஆகியோரின் பாராட்டுக்கள் முக்கியமானவை. இது பிரான்ஸ் அரசியல் பரப்பில் புத்துணர்வு மிக்க இளமையான அரசியலை விதைக்கும் எனத் தெரிவித்திருந்தனர்.

ஆயினும், கட்சியின் உருவாக்கம், Emmanuel Macronன் பதவி விலகல் ஆகியன 2017 பிரான்ஸ் அதிபர் தேர்தல் நோக்கிய பயணமாகத் தான் பலராலும் கருதப்படுகின்றது. கட்சிக்கான நிதி திரட்டல், மற்றும் கட்சியினதும் தனதும் பிரபலம் தொடர்பான கருத்துக் கணிப்புகள், மக்கள் மத்தியில் எவ்விதமான ஆதரவுகள் உள்ளன என்பது போன்ற ஆய்வுகள் சத்தமில்லாமல் நடந்தவண்ணமே உள்ளன.

தனக்கு மிக நெருங்கியவர்களை லண்டன் நகரில் ஒருங்கிணைத்து கலந்துரையாடல்களிலும் ஈடுபட்டுள்ளார். லண்டனில் ''Emmanuel Macron உடன் உணவருந்த 7500 யூரோக்கள்'' என விளம்பரங்களுடன் நிதித் திரட்டலில் மும்முரமாக இறங்கியுள்ளார். தேர்தல் வேட்பாளரா இல்லையா என்பது தொடர்பான அதிகாரபூர்வமான எந்தவொரு அறிவித்தல்களையும் மக்ரோன் கொடுக்கவில்லை. இருப்பினும் En Marche! இயக்கம் 2017 வெற்றி கிடைக்கும் வரை பயணிக்கும் எனத் தெரிவித்துள்ளார்.

## பாரிஸில் முதல் நிர்வாணப்பகுதி!



**பாரிசில்** நிர்வாணமாக மக்கள் நடமாடக்கூடியவாறு பிரத்தியேக இடம் ஒதுக்கப்படவுள்ளது. பாரிசில் முதல் நிர்வாணப் பகுதியாக இது இருக்கும் எனினும் பேர்ளின் போன்ற ஏனைய ஐரோப்பிய நாட்டுத் தலைநகரங்களில் நிர்வாணமாக நடமாடுவதற்கென பிரத்தியேக இடங்கள் ஏற்கனவே ஒதுக்கப்பட்டிருக்கின்றது. லண்டனில் வெற்றியளித்திருப்பதைப் போன்று நிர்வாண உணவகம் ஒன்றை பாரிசில் அமைக்கும் திட்டமும் கைவசமுள்ளது.

பசுமைக் கட்சியினரால் முன்வைக்கப்பட்ட இந்த யோசனையை ஒரு திட்டவரைவாக சமர்ப்பிக்கவுள்ளதாக பாரிசின் பிரதி மேஜர் புருனோ யூலியாட் தெரிவித்துள்ளார். உல்லாசப் பயணிகள் அதிகம் வரும் நாடாக பிரான்ஸ் இருந்தாலும் இயற்கையோடு ஒன்றி வாழ்வோருக்கான தனிப்பட்ட இடம் எதுவும் இல்லை. நாங்கள் யாரையும் அதிர்ச்சிக்கு உள்ளாக்க விரும்பவில்லை. இதற்கு உகந்த இடத்தை நாங்கள் தெரிவுசெய்யவேண்டும். கிட்டத்தட்ட பூங்கா போன்ற இடத்தையே தெரிவுசெய்வோம் எனத் தெரிவித்துள்ளார்.

தற்போதைக்கு பிரான்சில் நிர்வாணமாக ஒருவர் மக்கள் மத்தியில் தென்பட்டால் 15000 யூரோக்கள் தண்டப்பணமும் ஒரு வருட சிறைத் தண்டனையும் அமுலில் இருப்பது குறிப்பிடத்தக்கது.


இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு